Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை –07 | 19–04–2004 | திங்கட்கிழமை | ஓசை –61







## சபாநாயகர் தெரிவில் கடும் போட்டி

# ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப்பெற

# இரு பிரதான கட்சிகளும் தீவிர பிரயத்தனம்!

## பல கட்சித் தலைவர்களும் ஹெல உறுமயவைச் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

**22 ஆம் திகதி நடைபெறவுள்ள 13 ஆவது பாராளுமன்றத்திற்கான சபாநாயகர் தெரிவு விடயத்தில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இச் சபாநாயகர் தெரிவு விடயத்தில் ஜாதிகஹெல உறுமய முக்கிய பாத்திரம் வகிக்கக்கூடியதாகையால் அக்கட்சியின் ஆதரவைப்பெற இரண்டு பிரதான கட்சிகளும் தீவிர பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ள அதேவேளை இக்கட்சித்தலைவர் உட்பட பலகட்சித்தலைவர்களும் சபாநாயகர் தெரிவு தொடர்பாக ஜாதிகஹெல உறுமயவுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.**

இந்த ரீதியில் ஜாதிகஹெல உறுமயவுக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையில் நேற்று இரவு பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றுள்ளது.

இதன் போது ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 22 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவின் போது தமக்கு ஆதரவு தருமாறு கோரியுள்ளார்.

ஐ.தே. கட்சியில் பரிந்துரைக் (8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்ட பா.உறுப்பினர் கிங்ஸிலி இராசநாயகம் ராஜினாமா!

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கிங்ஸிலி இராசநாயகம் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக மட்டக்களப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் தனது சொந்த விருப்பின் பெயரிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் நேற்று முன்தினம் அறிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் பத்திரமுல்லையில் 6 பேருக்குக் காயம்

கொழும்பின் புறநகர்ப் பகுதியான பத்திரமுல்ல எனும் இடத்தில் நேற்று இரவு 7.30மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர். காரில் வந்த இனந்தெரியாதவர்களே துப்பாக்கித் தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக (8ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் சேர்ந்து சபாநாயகரை தெரிவுசெய்க!

### ஜாதிகஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து புதிய சபாநாயகரை தெரிவு செய்யுமாறு ஜாதிகஹெல உறுமய இரண்டு கட்சியினரையும் கேட்டுள்ளது.சபாநாயகரை தேர்ந்தெடுக்கும் பொழுது ஐக்கிய தேசிய முன்னணியினருக்கோ அல்லது புதிய அரசுக்கோ ஆதரவு வழங்குவது சம்பந்தமாக நாங்கள் தீர்மானம் மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம் என ஹெல உறுமயவின் அரசியல் உயர்பீட ஆலோசகர் அதுரலியரத்தின தேரர் கூறியுள்ளார்.

## இ. த .அதிகார சபையைக்குறுகிய காலத்திற்குள் பெறக்கூடிய நிபந்தனையுடனேயே பேசவேண்டும்

### பா.உ. சுரேஸ் பிறேமச்சந்திரன்

(கொழும்பு)

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை குறுகிய காலத்திற்குள் பெறக்கூடிய நிபந்தனைகளுடனேயே சமாதானப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும் என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எவ்வித ஆவணங்களும் இல்லாமல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தென்பகுதியை வளர்ப்பதற்கான சர்வதேச உதவிகளை பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்டதாக அமையுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சக்தி தொலைக்காட்சியில் மின்னல் நிகழ்விற்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கேள்வி: பேச்சுவார்த்தை என்ற போர்வையிலே தென்னிலங்கை வளர்கின்றதுடன் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான நோக்கமே அதிகமாக நடைபெறுகின்றன. மீண்டும் ஓர் (8ஆம் பக்கம் பார்க்க)

## த.தே.கூட்டமைப்புடன் சேர்ந்தே நாடாளுமன்றில் செயற்படுவோம்

### -சந்திரசேகரன், மனோகணேசன் அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் சேர்ந்தே செயற்படப்போவதாக மலையக மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் பி.சந்திரசேகரன் மற்றும் மேல் மாகாண மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடனான சந்திப்பின்போது மலையக மக்கள் முன்னணி மற்றும் மேல்மாகாண மக்கள் முன்னணியைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வர் என தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகவலை நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.சந்திரசேகரன், மனோகணேசன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தே நாங்கள் நாடாளுமன்றத்திற்கு செல்லவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இது காலத்தின் கட்டாயம் எனத் தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் சந்திரசேகரன். இதனாலேயே நாம் (8ஆம் பக்கம் பார்க்க)

## பாழடைந்த கிணற்றில் விசவாயு துப்பரவு செய்த இருவர் மரணம்

(கண்டி)

கண்டி வத்தேகம பல்லேகம வாசிகள் இருவர் கிணறு ஒன்றில் விசவாயு தாக்கியதால் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பாழடைந்த கிணறு ஒன்றை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போதே விசவாயு தாக்கி இவர்கள் இருவரும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் போது இவர்களை காப்பாற்றச் சென்ற இரண்டு ராணுவத்தினர் மயக்கமடைந்த நிலையில் காயமடைந்து கடுகஸ்தோட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இச் சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (32)

## தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் அன்னைபூபதியின் 16-வது நினைவு நிகழ்வு!

(கிளிநொச்சி)

தியாகி அன்னை பூபதியின் 16ஆம் ஆண்டு நினைவின் நேற்றைய நிகழ்வுகள் வடக்குகிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. மாவட்டம், கோட்டம், வலயம், பிரதேச ரீதியாக இந்நிகழ்வுகள் நடைபெற்றது.

இந்த நினைவுநாளை முன்னிட்டு போராளிகளின் பாசறைகள், பொதுஇடங்கள், வர்த்தக நிலையங்கள், அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், பிரதான வீதிகள், சந்திகள் என்பவற்றில் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, தாயகம் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளதுடன் அன்னை பூபதி தொடர்பான பதாகைகளும் ஆங்காங்கு கட்டப்பட்டுள்ளன.

உடையார்கட்டில் மட்டு அம்பாறை மாவீரர் மண்டபத்தில் நேற்றுநடைபெற்ற நிகழ்வில் வர்த்தகர்கள், தேசிய எழுச்சிப்பேரவையினர், பொதுமக்கள் கலந்துகொண்டனர். கிளிநொச்சி முருகன் ஆலயமுன்றலில் நேற்றும் தியாகி அன்னை பூபதி அவர்களின் 16 ஆம் ஆண்டு நினைவாக அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றுள்ளது. நேற்றைய நிகழ்வு (8ஆம் பக்கம் பார்க்க)

அன்னை பூபதியின் ...... நிகழ்வில்...



# ரணிலின் "மீண்டும் உதயமாகும் சிறிலங்கா" என்ற திட்டம் சந்திரிகாவின் ஐ.ம.சு.முன்னணியால் நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னைய ஐக்கியதேசியக் கட்சி அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருந்த "மீண்டும் உதயமாகும் சிறிலங்கா" என்ற திட்டத்தை தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிராகரித்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு அடுத்த மேமாதம் 17 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ் தலைமையில் பெல்ஜியம்- புரூசல்ஸ் நகரில் நடைபெறவுள்ளது. முன்னைய பிரதமரின் மீண்டும் உதயமாகும் சிறிலங்கா என்ற திட்டத்தை தற்போதைய அரசாங்கம் நிராகரித்துள்ளது சம்பந்தமாக இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

மேலும் விடுதலைப்புலிகளும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசும் செய்துகொண்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் சம்பந்தமாக இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளது. தற்போதைய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு சர்வதேச நிதிவழங்கும் நிறுவங்களின் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளது.

# பி.சபை ஊழியரைத்தாக்கியவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்

(அலுவலக செய்தியாளர்)

பாரதிபுரம் -கரடிபோட்டைப் பகுதியில் மண்ஏற்றிச்சென்ற பிரதேச சபை ஊழியர்கள் அப்பகுதியில் மண் ஏற்றிக்கொண்டு நின்றவர்களினால் தாக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

மேற்படி சம்பவம் கடந்த 16 ஆம் திகதியன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பிரதேச சபையினர் கிளி காவல்பணிமனையினருக்கு முறையிட்டதையடுத்து கிளி.காவல்பணிமனைப் பொறுப்பாளர் கௌரிராசா தலைமையில் சென்ற காவல்துறையினர் ஸ்தலத்திற்கு விரைந்து சந்தேக நபரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியதுடன் சந்தேக நபர் காவல்துறையினரால் நேற்று முன்தினம் கிளிமாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.(ரோ)

# சர்வதேச தரத்திலான நகரமாக யாழ்.நகரை மாற்றத் திட்டம்

## -யாழ். செயலகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை சர்வதேசத்தரத்திலான தொரு மாதிரி நகரமாக அபிவிருத்தி செய்வதற்குரிய துரித திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக யாழ்.அரசசெயலகம் தெரிவித்துள்ளது.

யாழ்.நகரை சர்வதேசதரத்திலான சகல வசதிகள் கொண்டதொரு நகரமாக அபிவிருத்தி செய்வதன் மூலம் கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பின் தங்கிப் போயுள்ள யாழ். மக்களின் வாழ்வியலை மீளக் கட்டியெழுப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்ட நடைமுறைகளில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம், உலகவங்கி, ஆசிய அபிவிருத்திவங்கி , உட்பட்ட பல சர்வதேச தொண்டர் அமைப்புக்களும் பங்கெடுக்கவுள்ளன.

தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல், கைத்தொழில்ஸ்தாபனங்கள் எனபல்வேறு அபிவிருத்தியுடனும் மிக விரைவில் நடைமுறைக்கு வரவுள்ள இத்திட்டம் 2005 ஆம் ஆண்டில் நிறைவுபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

# ஆட்காட்டிவெளி-மடுவீதி மிகமோசமான முறைப்பாடு

மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டி வெளியில்இருந்து மடுத்திருப்பதிக்குச் செல்லும் வீதி மிகவும் மோசமாக வுள்ளது.

12கி.மீ.தூரம் உள்ள இப்பாதை நீண்ட காலங்களாக களிமண் பாதையாகவுள்ளது. மழை பெய்யும் போது இப்பாதை சேறு சகதியாக இருப்பதாகவும் எம் மக்கள் முறையிட்டுள்ளனர். (மி)

# கரைத்துறைப்பற்று பி.செயலர் பிரிவு விளையாட்டுப் போட்டி

(முல்லைத்தீவு)

கடந்த 16,17ம் திகதிகளில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவு கழகங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப்போட்டி முல்லைத்தீவு பொதுமைதானத்தில் உதவி அரச அதிபர் திரு.காசிப்பிள்ளை தலைமையில் ஆரம்பமானது.

இதில் தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லைப் பிரதேசப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றிவைத்தார்.

12 விளையாட்டுக்கழகங்கள் பங்கு கொண்ட மெய்வல்லுனர் போட்டிகளில் முதலாம் இடத்தை இளந்தென்றல் வி.க.அளப்பில், இரண்டாம் இடத்தினை வளர்மதி வி.க.முள்ளியவளை, மூன்றாம் இடத்தை நெய்தல் விளையாட்டுக்கழகம் முல்லைத்தீவு ஆகியன பெற்றுக்கொண்டன பெருமளவான மக்கள் இவ் விளையாட்டு நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## 104ஆவது வயதில் காலமானார்

(அலுவலக செய்தியாளர்)

மாம்பழச்சாமியார் என்று அழைக்கப்பெற்று வந்த க.சின்னத்துரை என்பவர் அண்மையில் காலமானார்.

வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் திருவடி நிலையத்தில் ஆரம்பகாலம் முதல் பயனாளியாக இருந்து வந்த இவர் 104 வது வயதில் அண்மையில் காலமானார். இவர் நாட்டார் பாடல்களில் பெரும் புகழ் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

# பொலிஸ் ஜீப்மீது கல்வீச்சு கரவெட்டியில் 9 பேர் கைது

(வடமராட்சி)

இரவு ரோந்து சென்ற பொலிஸ் ஜீப் மீது கல்வீச்சு சம்பவமொன்று இடம்பெற்றதையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் 9 பேரை நெல்லியடிப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு கரவெட்டி இராஜகிராமப்பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்; கடந்த தமிழ்-சிங்கள புத்தாண்டு தினத்தன்று மேற்படி கிராமத்தைச் சேர்ந்த இரு விளையாட்டுக் கழகங்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்கு மோதலாக வெடித்திருந்தது. இதன் போது இரு தரப்புகளும் மாறி மாறி வாள்களால் வெட்டிக் கொண்டன. சம்பவத்தில் படுகாயமடைந்த 11பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அப்பகுதியில் சுமுக நிலையினை ஏற்படுத்தும் முகமாக நெல்லியடி பொலிசார் ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். அவ்வாறு ரோந்து சென்ற பொலிசாரது வாகனமொன்றையே கல்வீச்சிற்கு உள்ளனதாகத் தெரியவருகிறது.

எனினும் ஜீப் வண்டிக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக மேலதிக தகவல்கள் எவையும் வெளிவரவில்லை. (27)

# கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கு உலகவங்கி நிதி உதவி செய்யமுடிவு

(கொழும்பு)

சிறிலங்காவில் சமுதாயங்களை பலப்படுத்தி கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான சமுதாயத்திட்டமொன்றிற்கு உலக வங்கி ஐந்து கோடி பத்துஇலட்சம் டொலர்களை வழங்கவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகவங்கியின் உதவியினால் சமுதாய மட்டத்திலான பல உபதிட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமெனவும்.

உள்ளூர் மற்றும் தேசிய நிறுவனங்களின் ஆற்றலை விரித்தி செய்வதற்கும் சமுதாயத்தேவைகளை நிறைவேற்றும் வகையில் நிறுவனங்களுக்கு உதவிகளை வழங்கக்கூடியதான தாபனரீதியான வாய்ப்புக்கள் கிடைக்குமென நம்பப்படுகிறது.

உலகவங்கியின் இந்த உதவித்திட்டத்தினால் தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரங்களை உள்ளூர் தலைவர்களுக்கு, மாற்ற கிராமிய அடிப்படையிலான சுயஉதவிப் பயிற்சித்திட்டம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகவங்கியின் இந் திட்டத்திற்கான நிதியுதவி முற்றுமுழுதாக சிங்கள கிராமங்களுக்கே பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய முதற்கட்டமாக மொனறாகலை, பதுளை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, காலி ஆகிய ஐந்து மாவட்டங்களில் முதலில் ஆரம்பிக்கப்பட்டு சுமார் நான்கு வருடங்களில் ஆயிரம் கிராமங்களுக்கு அமுல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிறிலங்காவில் பொருளாதார வளர்ச்சிகுன்றியுள்ள மிகவும் வறிய பிரதேசங்களுக்கு இந்த உதவியை செய்யக்கூடியதாக இருப்பது குறித்து தாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைவதாக உலக வங்கியின் பிரதிநிதி பீற்றர்ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.

## இளைஞன் மீது தாக்கு

(புளியம்பொக்கணை)

புளியம்பொக்கணைப் பகுதியில் வயலுக்கு நீர்பாய்ச்சுவதற்காக வாய்க்கால் நீரை மறித்து விட்டுச் சென்ற இளைஞர் ஒருவரை மற்றுமொரு இளைஞர் தாக்கியுள்ளார்.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் புளியம் பொக்கணை கலவெட்டித்திடலைச் சேர்ந்த ச. சுதர்சன் என்பவர் (வயது-23) கைமுறிந்த நிலையில் கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (தீ.ச)

## வைத்தியசாலை புனரமைப்பு

(மன்னார்)

போர்க்காலத்தில் அழிவுற்ற அடம்பன் பள்ளமடு வைத்திய சாலைகள் தற்சமயம் புதியதாக கட்டப்பட்டு வருகிறது.

இதற்கான நிதியுதவியை நிக்கொட் நிறுவனம் வழங்கியுள்ளது. பல மில்லியன் ரூபாய் செலவில் கட்டப்பட்டுவரும் இந்த வைத்தியசாலைகளில் பள்ளமடு வைத்தியசாலை 02 மாதத்திற்குள் திறந்து வைக்கப்படுமென அறிவிக்கப்படுகிறது. (மி)

# இராணுவம், பொலிசாரின் ரோந்து வவுனியாவில் அதிகரிப்பு

(செட்டிகுளம்)

உந்துருளி பாதுகாப்புப் பிரிவின் இராணுவம் மற்றும் பொலிசாரின் பாதுகாப்பு மற்றும் வீதிரோந்து நடவடிக்கை தற்போது தீவிரமாக வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீண்ட இடைவேளையின் பின்னர் அதிகளவான பொலிசாரும், இராணுவமும் இணைந்து வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மக்களை சோதனை செய்யாதபோதிலும் பாதுகாப்பு நடவடிக்கையினை தாம் அதிகரித்து இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை வவுனியாவில் முன்னரங்குக்காவல் நிலைகள் பல மீள அமைக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதாரத்துறைக்கு அடுத்தாண்டில் இருமடங்கு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

சுகாதாரத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி இருமடங்காக அதிகரிக்கப்படுமென சுகாதார மற்றும் போஷாக்கு நலத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, 1.3 வீதமாக இருந்த தொகை 2.5 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது என்று கூறிய அவர், அடுத்தாண்டு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த தொகை ஒதுக்கீடு செய்யப்படுமெனவும் கூறியுள்ளார்.

அத்துடன் இந்த மாற்றம் சுகாதாரத் துறையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்துமெனவும் அவர் கூறியுள்ளார்.

# கிழக்கு அரச உயர் அதிகாரிகளுடன் சனாதிபதி இன்று கலந்துரையாடல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் படை உயர் அதிகாரிகள் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் அரச அதிபர்கள் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றின் பிரதிநிகளுடன் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இன்று 19ம் திகதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

சனாதிபதி மாளிகையில் நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தையின் போது கிழக்கில் இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு மேற்கொள்ளப்படுவது பற்றி ஆராயப்படவுள்ளது என்றும் சனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

# அரசின் பிரமுகர்களுக்கான அந்தஸ்த்தை ஏற்க தொண்டமான் மறுப்பு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து நேற்று நாடு திரும்பிய ஆறுமுகம் தொண்டமான் முக்கிய பிரமுகர்களுக்குரிய அந்தஸ்த்துடன் அழைத்து வருவதற்கு விமான நிலையத்திற்கு வாகனம் அனுப்பி வைக்கப்பட்டபோது அதில் ஏற மறுத்ததுடன் தனிப்பட்ட வாகனத் திலேயே கொழும்பு சென்றடைந் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக விமானநிலையத்தில் உரிய மரியாதையுடன் தாம் நடத்தப்படவில்லையெனத் தெரிவித்த தொண்டமான் தாம் நினைத்தால் இந்த அரசாங்கத்தைச் செயலிழக்கச் செய்வோம் எனத் தெரிவித்துள்ளார். இவருடன் முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி. திஸாநாயக்க மிலிந்தமொறகொட ஆகியோர் நாடுதிரும்பியிருந்தன. (32)

# வறிய மாணவர்களின் கல்வியை மேம்படுத்த முயற்சி

## – யாழ். தமிழ் மாணவர் ஒன்றியம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்திலுள்ள வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும் நோக்குடன் யாழ்மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் நிதி சேகரிக்கும் முயற்சியில் ஈடுபடவுள்ளனர்.

யாழ்மாவட்டத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான வறிய மாணவர்கள் தமது குடும்ப நிலைமைகள் காரணமாகவும் யுத்தத்தினால் ஏற்பட்ட பின்னடைவுகள் காரணமாகவும் தமது கல்வியை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் வாழ்ந்து வரும் மாணவர்களுக்கு, உதவும் நோக்குடன் எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் யாழ்மாவட்டம் பூராகவும் இந்நிதி சேகரிப்புப்பணியை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான வறிய மாணவர்கள் பலன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (33)

# ஹமாஸ் இயக்க உயர்தலைவர் அல்ரன்டிசி இஸ்ரேலிய ஹெலித் தாக்குதலில் பலி

## மெய் பாதுகாவலர்கள் இருவரும் மரணம்

**ஹமாஸ் இயக்கத்தின் உயர் தலைவரான அப்துல் அஸீஸ் அல்ரன்டிசி இஸ்ரேலினால் நேற்றுமுன்தினம் கொல் லப்பட்டுள்ளார். ஹமாஸ் இயக்கத்தின் தலைவரான இவர் பயணம் செய்த கார்மீது இஸ்ரேலிய ஹெலிகொப்டர் நடத்திய றொக்கட் தாக்குதலின்போதே இவர் கொல்லப்பட்டார். இதேவேளை இவரின் மெய்க் காப்பாளர்கள் இருவரும் இதன் போது கொல்லப்பட்டுள்ளனர்.**

இஸ்ரேலின் இந்தத் செயலினால் கோபமடைந்துள்ள ஹமாஸ் இயக்கம் இதற்கு பழி வாக்கு வதற்காக நூறு தாக்குதல்களைச் செய்யப் போவதாக சூளுரைத் துள்ளது.

தங்களுடைய பழிவாங்கும் நடவடிக்கைகள் பூர்த்தி அடையும் வரை தங்களதுபடையணிகள் அனைத்தும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்குமெனவும் ஹமாஸ் இயக்கத்தின் இராணுவப் பிரிவு தெரிவித்திருக்கின்றது.

அமெரிக்கா அளித்த ஊக்கத்தின் காரணமாகவே இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கின்றது என பலஸ்தீன அமைச்சரவை தெரிவித்துள்ள போதிலும் அமெரிக்கா அதனை மறுத்துள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் கொபி அனான் இந்தப் படுகொலையைக் கண்டித்துள்ளார்.

அவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில், மத்திய கிழக்கில் இதனைத் தொடர்ந்து பல கொலைகள் இடம் பெறக்கூடும் எனத் தெரிவித்துள்ளார். இவ்வாறான விமானத் தாக்குதலால் அப்பாவிமக்கள் கொல்லப்படுவதை ஐரேப்பிய சமூகத்துடன் இணைந்து எகிப்து, ஜோர்தான் ஆகிய நாடுகளும் தங்களது கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

ஹமாஸ் இயக்கத்தின் முன்னாள் தலைவரும் ஆன்மீகத்தலைவருமான ஜாசீன்அண்மையில் இஸ்ரேலியபடையினரின் ஹெலிகொப்டர் தாக்குதலுக்கு இலக்காகி கொல்லப்பட்டமையும் அதனைத் அடுத்து ஹமாஸ் இயக்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவரே தற்போது கொல்லப்பட்டுள்ளார். என்பதும் குறிப்பிடத்தக்கது.



போர்ட் புரோக் முகாமுக்கு கோல்ப் பயிற்சிக்காக வருகை தந்துள்ள ரைகர் வூட் இவர் இராணுவப் பயிற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

# ஷரோனின் பிரேரணையை ஏற்றாலே பலஸ்தீன இராச்சியம் உருவாகும்

## புஷ், ரொனிபிளேயர் தெரிவிப்பு

பலஸ்தீன இராச்சியம் ஒன்று உருவாக்கப்படவேண்டுமானால் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனின் பிரேரணையை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறுவழியில்லையெனஅமெரிக்க சனாதிபதி புஷ்சும், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் தெரிவித்துள்ளனர்.

மேற்குக்கரையோரப் பகுதியிலுள்ள யூதக்குடியேற்றத் திட்டங்களை தொடர்ந்தும் வைத்திருக்கும் அதேவேளை காஸா முனையிலுள்ள சில இடங்களிலிருந்து யூதக்குடியேற்றக்காரர்கள் வாபஸ் பெறுவர்களென்பது இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனின் திட்டமாகும். இத்திட்டத்திற்கு பலஸ்தீனர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை தெரிந்ததே. பிரிட்டிஷ் பிரதமர் இது சம்பந்தமாக கருத்து தெரிவிக்கையில்;

ஏரியல்ஷரோனின் திட்டம் நடைமுறைக்கு வருமானால் 2005 ஆம் ஆண்டளவில் பலஸ்தீன இராச்சியம் உருவாகும் சாத்தியம் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

மத்தியகிழக்கு சமாதான திட்டத்தை தயாரித்துள்ள ரஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பிய சமூகம், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்பவற்றிற்கு அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் இவ் விடயம் சம்பந்தமாக ஆராயுமாறு கேட்டுள்ளார் இது சம்பந்தமாக ஆராயும் மாநாடொன்று பேர்லினில் எதிர்வரும் 28ம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேலிய படையினரின் தாக்குதலில் சேதமுற்ற தனது வீட்டை அவதானிக்கும் பலஸ்தீன கிறிஸ்தவரான ஜேக்கப் மிர்ஸா.



1994ம் ஆண்டு ருவாண்டாவில் 8 லட்சம் டுட்சி ஹியுடஸ் இனத்தவர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மண்டையோடுகளை கழுவி சோதனையிடும் ருவாண்டா பெண்.

# வியட்நாமுடன் ஒப்பிடுமளவுக்கு ஈராக் விவகாரம் செல்கின்றது

## - ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார ஆணையாளர்

(கொழும்பு)

ஈராக் விவகாரம் வியட் நாம் யுத்தத்துடன் ஒப்பிடவைக்கும் அளவிற்கு ஈராக்கில் வன்செயல்கள் அதிகரித்து வருவதும், பணயக்கைதிகள் தடுத்து வைக்கப்படுவதுமான சம்பவங்கள் காட்டுகின்றதென ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஈராக் பிரச்சினை வியட்நாம் யுத்தத்திலும் பார்க்க மிகப் பாரதூரமாக மாறக்கூடும் எனவும், ஈராக்கில் நீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் அதன் விளைவுகள் மிக நீண்ட காலத்திற்கு துன்பம் தருபவையாக இருக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.இதேவேளை அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவித்த அமெரிக்க சனநாயகக் கட்சிச் செனட்டர் அட்வேட். கெனடி ஈராக் சனாதிபதி புஷ்ஷின் வியட்நாம் என்று தெரிவித்துள்ளார்.



அமெரிக்கப்படையினர் தனது நஜாப் முகாம் அருகில் உலங்கு வானூர்தியில் இருந்து குதிக்கின்றனர்.

# பா.ஜ.க.வுக்கு ஆதரவென்ற பேச்சுக்கே இடமில்லை

## —சமாஜ்வாதிக்கட்சி தெரிவிப்பு

உத்தரப்பிரதேசத்திலோ மத்தியிலோ பாரதிய ஜனதாவுக்கு ஆதரவு எனும் பேச்சுக்கே இடமில்லை என்று சமாஜ்வாதிக் கட்சிகூறியுள்ளது.

வெளிநாட்டில் பிறந்தவர் உயர் பதவிக்கள் வகிப்பதை பா.ஜ.க. எதிர்ப்பதனால் அது உண்மையற்றதாக இருக்கின்றது. என்று சமாஜ்வாதிக்கட்சி கூறியுள்ளது.

வெளிநாட்டில்பிறந்தவர்கள் உயர் பதவிகள் வகிப்பதை தடை செய்யும் சட்டத்தை பா.ஜ.க. கொண்டுவந்தால் அதனை சமாஜ்வாதி கட்சி ஆதரிக்க மாட்டாது என்றும் ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னரும் வாக்குகளைக் கைப்பற்ற பாரதிய ஜனதா பேபஸ் பீரங்கி, அயோத்தி வெளிநாட்டவர். எனும் பிரச்சினைகளை கிளப்பி வருவதாக அக்கட்சிச் செயலர் குற்றம் சாட்டியுள்ளார்.

# தனிநபர் புகழ் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடவில்லை

## — சோனியா காந்தி தெரிவிப்பு

இலட்சியவாதம்,இந்தியாவுக்கான நெடு நோக்கு போன்றவற்றின் அடிப்படையிலேயே தமது கட்சி தேர்தலில் போட்டியிடுவதாகவும் எந்தவொரு குடும்பப் பெயர்?அடிப்படையிலோ தனிநபர் புகழ் அடிப்படையிலோ போட்டியிடவில்லை என்று காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி கூறியுள்ளார்.

பிரதமர் பதவிக்காக தாம் அரசியலில் சேரவில்லை என்றும் தனது மனச்சாட்சி கூறியதன் படியே தாம் நடந்து கொள்வதாகவும் சோனியா காந்தி கூறியுள்ளார்.

வெளிநாட்டவர் என்று பா.ஜ.க.கிளறி வருவது பற்றி கேள்வி கேட்ட போது காங்கிரஸ் கட்சி எப்போதெல்லாம் பலமடைந்து வருகின்றதோ அப்போதெல்லாம் பா.ஜ.க. இதனை பிரச்சினை ஆக்கிவிடுகின்றது என்று கூறியுள்ளார்

# ஜப்பானிய தகவல் தொடர்பு செயற்கைக்கோள் செலுத்தல்

அமெரிக்காவின் கேப்கனாவரலில் உள்ள ஏவு தளத்திலிருந்து ஜப்பானிய தகவல் தொடர்பு செயற்கைக் கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.

சூப்பர் பேர்ட் -6 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த செயற்கைக் கோள் அட்லஸ் -2 ஏஎப் றொக் கெட் விண்ணில் செலுத்தியுள்ளது. ஜப்பானைச் சேர்ந்த 'விண்வெளி தொடர்புக் கூட்டுத்தாபனம்' எனும் நிறுவனத்துக்காக இந்த செயற்கை கோள் செலுத்தப்பட்டுள்ளது.

ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்கொரியா ஆகிய நாடுகளில் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு இடையிலான தகவல் தொடர்புக்கு இந்த செயற்கைக் கோள் பயன்படுத்தப்படும் இந்த செயற்கைக் கோள் அதன் நிரந்தர சுற்றுப் பாதையில் அடுத்த வாரத்துக்குள் நிலை நிறுத்தப்படும் ஜூனிலிருந்து இது செயற்படத் தொடங்கும். இதன் ஆயுட்காலம் 13 ஆண்டுகள் என்றும் கூறப்படுகின்றது.

# ஆன் சாங் சூகியை விடுவித்தாலே ஐரோப்பிய மாநாட்டில் இடம்

## - மியான்மார் அரசிடம் வலியுறுத்து

மியன்மார் அந்நாட்டின் சனநாயகத்தின் காவலரான ஆன்சாங் சூகியை விடுதலை செய்து அவரது கட்சிக்கு எதிரான நடவடிக்கையைக் கைவிட்டால் மட்டுமே அந்நாடு ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்காசிய நாடுகள் சங்கத்தின் ஏழு அங்கத்துவ நாடுகளோடும் சீனா, ஜப்பான்,தென்கொரியா ஆகியவற்றோடும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்பதாகவே அயர்லாந்தில் இடம் பெற்ற கூட்டமொன்றில் ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்ட அமைச்சர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்கள்.



# அகிம்சை போரில் அன்னை பூபதி

தமிழீழ போராட்ட வரலாற்றில் அகிம்சை என்பதன் மறு உருவம் தியாகி திலீபனும் அன்னை பூபதியும் என்றால் அதுமிகையாகாது.1947ல் இந்திய சுதந்திரத்திற்கு வழிசமைத்தது அகிம்சைப் போரே. ஆனாலும் அதே இந்திய தேசத்தின் முகத்திரையைக்கிழித்து அகிம்சையின் உண்மைவடிவை உலகிற்கு உணர்த்தியவர்கள் இவர்களே.

தமிழீழ தேசியவிடுதலைப் போராட்டம் பல ஆயிரம் மாவீரர் களாலும் தேசப்பற்றாளர்களாலும் கட்டியெழுப்பப்பட்ட வரலாற்றைக்கொண்டு நீண்டு செல்கிறது. அந்தவகையிலே அன்னை பூபதியின் தியாகம் தனித்துவமானது.

ஒருபுறம் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மறுபுறம் சிறிலங்கா இராணுவம் தேசவிரோத கும்பல்களின் நடவடிக் கைகளுக்கு மத்தியில் வீரத்துடன் தனது போராட்டத்தை முப்பது நாட்களாகத் தொடர்ந்தவர் அன்னைபூபதி அவர்கள்.

**பா. சிவரஞ்சன்**

*.அமைதிக்காக வந்த இந்தியஇராணுவம் அதற்கு முற்றிலும் எதிராக தமிழீழத்தில் மேற்கொண்டுவரும் தமிழர் விரோத செயற்பாடுகள் நிறுத்தவேண்டும்.

*.நாட்டில் சாந்தி சமாதானம் ஏற்பட்டு சுமூகநிலை தோன்ற தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநோன்பில் களம் இறங்கினார். மட்டக்களப்பு அமிர்தகளி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் அன்னை நடத்திய போராட்டம் நடைபெற்ற வேளை பல்லாயிரக்கணக்கான மக்கள் புடைசூழநின்று ஆதரவு வழங்கியதுடன் போராட்டத்திற்கு பாதுகாப்பும் வழங்கியிருந்தனர்.ஆனாலும் எந்தவகையிலும் இப்போராட்டத்தை குழப்பியடிப்பதில் விடாப்பிடியாக இருந்த சக்திகள் அனைத்தும் தோல்வியையே சந்தித்தன.

அன்னை பூபதியின் போராட்ட வரலாறு நீண்டது. அடுத்த வேளை உணவிற்கே வழிதேடியபோதும்பசியுடன் வந்தபோராளிகளுக்கு உணவளித்து மகிழ்ந்தவர்.

வாழ்க்கைச் சுமையை ஒருபுறமும் போராட்டச்சுமையை மறுபுறமும் சுமந்து தமிழீழ போராட்டத்திற்கு உரமூட்டியவர். எதிரிகளும் துரோகிகளும் போராட்ட இரகசியங்களைப்பெற சித்திரவதை செய்தபோதும் உறுதிகுலையாது நின்றவர்.

அன்னைபூபதி நடாத்திய போராட்டத்தின் தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட பல்வேறுவகையான போராட்டங்கள் இந்திய ஆளும்அதிகார வர்க்கத்திற்குத் தான்நினைத்ததை சாதிக்கமுடியாது என்ற அவமானத்துடன் தாயகம் திரும்ப வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும் அன்றில் கொண்ட கொள்கைக்காக உயிர்துறக்க அஞ்சோம் என்றஅன்னையின் அறிவிப்பு காந்திதேசத்திற்கு அழுத்தத்தைக்கொடுத்தது.

ஆனால் இந்தியவல்லாதிக்க படைகள் இரக்கம் காட்டவில்லை. மாறாக அன்னையின் அகிம்சையினை இழிவுபடுத்தினார்கள். தமிழ்மக்களின் உரிமைக்கான கோரிக்கைகள் நிறைவேற்றுவதே தனது இலட்சியம் என தனது போராட்டத்தில் விடாப்பிடியாக நின்றார். தமிழர்களது தேசியவிடுதலைப் போராட்டத்தைக் கொண்டு நடாத்தும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு ஆயுதப்போராட்டம்மட்டுமன்றி அகிம்சைப்போராட்டத்தை அறிமுகப்படுத்திய பாரததேசத்தை மிஞ்சும் அளவிற்கு அகிம்சைப்போரிலும் நாம் வல்லவர்கள் என்பதை உலகிற்கு பறைசாற்றியது இதன்மூலம் அறவழிப்போராட்டத்தின் உச்சத்தினை தொட்டுக்காட்டி விட்டவர் எம்அன்னை பூபதி.

எதிரியின் பல்வேறுபட்ட சவால்களை முறியடிக்க தமது தொழில்சார் திறமைகளை போராட்டவளர்ச்சிக்கு வழங்கி உரமிட்டவர்கள் தேசப்பற்றாளர்கள் அந்தவகையில் அன்னைபூபதி தனக்கென தனியிடம் பிடித்துள்ளார்.

ஆகவே அன்று புலிகள் வேறு தமிழர் வேறு என்று டில்லி அரசு கூறியபோது புலிகளே தமிழர் தமிழரே புலிகள் என்று கூறி ஆகாரமின்றி சத்தியப்போரில் ஆருயிரை ஆகுதியாக்கிய தமிழ்ப்பெண்போராளி மீன்பாடும் தேனாட்டின் வீரத்தியாகம் எங்கள் தாய் பூபதியே.

தாய்மண்ணின் விடுதலைக்கும் தமிழ்மக்களின் சுதந்திரத்திற்கும் உண்ணாநோன்பிருந்த பூபதித்தாய் 1988 ஏப்ரல் மாதம் 19ம் நாள் தன்னுயிரைத் தியாகம் செய்தார்.

ஆகவே அன்னை பூபதியின் போராட்டமானது எவரும் எந்த நிலையிலும் தனது இனத்தின் விடுதலைக்காக போராடமுடியும் என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளது. பெண்களின் மனோதைரியத்தின் வலிமையை உணர்த்திநின்றவர் பூபதித்தாய் தனது இனத்தின் மீதும் தமிழ்மக்களது தாயக விடிவின் மீதும்கொண்டதேச வைராக்கியத்தால் தனது உயிரைக்கூட துச்சமென நினைத்து உயிரை ஆகுதியாக்கியவர் அன்னைபூபதி.

எனவே இவ்வேளையில் அன்னைபூபதிக்கு நாம்செலுத்தும் அஞ்சலி அவர்அன்பு, பாசம்,நேசம் வைத்திருந்த மக்களின் விடுதலை விரைவுபடுத்த அனைவரும்ஒன்றுசேர்ந்து உழைக்க வேண்டியதே.

## உன் கனவாம் தமிழீழம் தரணியிலே உருவாகும்

விடுதலைத் தீயினை- விழியினில் ஏந்தி
உடலினை உருக்கிய உத்தமியே...
தொடுகடல் அயலார்-முகத்திரை கிழித்தே
கொடும் பசித் தீயில் குதித்தவளே...
"விடுதலைபுலி நிலமதில் ஆளட்டும்
கொடு எமதுரிமை-இனம் வாழட்டும்" என்றே
அறுபட விலங்கினை உடைத்தவளே-எமை
அவனியெலாம் புகழ் உரைத்தவளே...

சிந்திய இரத்தம் சீரழிவதா.. சிறு
மந்தைகள் போலே நாம் வாழ்வதா...?
இந்திய அரசே நீதிகொடு-எங்கள்
செந்தமிழ் ஈழம் வாழ விடு
முந்தையர் ஆண்ட மண் மீதே-நாம்
சொந்தமுடன் வாழ பாதை விடு..
வெந்தது போதும் எம் மக்கள் -இனி
வேண்டுமோர் சுதந்திர வாழ்வென்றே
வந்த'படைக்' கெதிராய் -வயிற்றில் பசித்தீயை
செந்தணலால் மூட்டி சென்றனையோ
எங்கள் அம்மா?

திங்கள் ஒன்று நீ
தீராப் பசி கிடந்தாய்
வெங்களத்தில் தோற்றபடை-உன்
விரதத்திலும் தோற்க வைத்தாய்
எங்களினம் பணியாது - எமன் வரினும் கலங்காது
வங்கக்கடற்பரப்பும்- வான்நிலவும் உள்ளவரை
பொங்கு தமிழ்த்தாயே-பூபதியே உன்கனவாம்
தங்கத் தமிழீழம் தரணியிலே
உருவாகுமம்மா...?

**புங்கையூர் காந்தன்.**

# அன்னை பூபதியினதும் தேசப்பற்றாளரதும் தடத்தில் பயணிப்போம்

ஒரு இனத்தின் விடுதலையையும் கதிரையில் இருந்து கட்டளை பிறப்பிப்பதன் மூலமோ அல்லது மேடைகளில் ஏறிநின்று, உரத்து குரல் எழுப்புவதன் மூலமோ வென்றெடுத்த வரலாறு இதுவரையில் இல்லை. எந்த விடுதலை பெற்ற நாடும் விலைமதிப்பற்ற உயிர்களை விலையாக கொடுத்தும் இரத்தம் சிந்தியும் தான் விடுதலை பெற்றுள்ளன.

அந்த வரிசையிலே தமிழீழ விடுதலைப் போராட்டமும் அளப்பரிய தியாகங்களாலும் 17 ஆயிரத்து 600 இற்கு மேற்பட்ட மாவீரர்களினாலும், தேசப்பற்றாறர்களினாலும் கட்டி எழுப்பப்பட்ட வரலாறாக காணப்படுகின்றது. தியாகமும் வீரமும், அர்ப்பணிப்புக்களும் என்றுமே மறக்க முடியாதவையாகும்.

தம்மை முற்று முழுதாக விடுதலைப்போராட்டத் தில் இணைத்துக்கொண்டு களமுனைகளில் நின்று போராடாது விட்டாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு என தம்மை அர்ப்பணித்தவர்கள் தான் தேசப்பற்றாளர்கள். இவ் வரலாற்றுத் தடத்தில் அன்னை பூபதிஅவர்களின் தியாகம் தனித்துவமான ஒன்றாகும். இந்திய வல்லாதிக்க அரசும் தமிழ் தேச விரோத சக்திகளும் இணைந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் தமிழ் இனத்தையும் இழிவுபடுத்தி வந்தனர். இந்தியாவின் செயற்பாடுகளும் நாளுக்கு நாள் விரிவடைந்து சென்ற வேளையில் தான் இத்தாயின் தியாகப் பயணம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியாவையும் மகாத்மா காந்தியையும் என்றுமே பிரித்துப் பார்க்கமுடியாது . ஏனெனில் 1947 ஆம் ஆண்டு இந்தியாவின் சுதந்திரத்திற்கு வித்திட்ட பெருமை மகாத்மாகாந்திக்கே உரித்தான ஒன்றாகும். அதே பாரததேசத்திற்கு அகிம்சையின் வடிவத்தினை எடுத்துக்காட்டி இந்திய வல்லாதிக்க தேசத்தின் முகத்திரையினைக் கிழித்தவர்கள் தியாகி பூபதியும், தியாகி திலீபனும்.

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நல்லைக்கந்தன் ஆலயத்தில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பன்னிரெண்டு நாட்கள் பசித்தீ வளர்த்து 1987 ஆம்ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் நாள்.அகிம்சை நாயகன் என தமிழீழ மக்களின் மனங்களில் இடம் பிடித்துக்கொண்டான்.

இந்திய வல்லாதிக்கம் தமிழ் மக்களின் மீது கொடூர யுத்தத்தைத் தீவிரமாகநடத்திய போது அன்னையர் முன்னணி என்ற பெண்கள் அமைப்பு ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்தனர். இதன் முதற் தடவையாக அன்னம்மா டேவிற் என்ற பெண்மணி உண்ணாவிரதப் போரினை ஆரம்பித்தவேளை இதனை கேள்வியுற்ற இந்திய அரசு கூடநாடகத்தின் மூலம் அன்னம்மாவின் பிள்ளைகளுக்கு இதில் விருப்பம் இல்லை என்றும் தனது தாயைக் காப்பாற்றித் தருமாறும் கோரி இந்தியப் படையினர் கடிதம் ஒன்றினைப் பெற்றுக் கொண்டு அன்னம்மா டேவிற்டின் நோன்பினை தடுத்து நிறுத்தியது. முதல் முயற்சி திட்டமிட்டு சீர்குலைக்கப்பட்ட நிலையில் இந்த தேசப்பற்றாளரின் உண்ணாவிரதப் போராட்டம் இடை நிறுத்தப்பட்டது.

முதல் முயற்சி திட்டமிட்டு சீர்குலைக்கப் பட்டதால் அன்னை பூபதி அவர்கள் இப் போராட்டத்தினை ஆரம்பித்தார். அடுத்த சவாலை எதிர்கொள்வதற்காக இந்தியப்படையினர் பல்வேறு வழிகளை மேற்கொண்டனர். எந்தவகையிலும் பூபதியின் தள்ளாடும் வயதிலும் தளராத உறுதியுடன் தனது அகிம்சைப் போரினை பூபதி அவர்கள் மேற்கொண்டார்.

இந்தியப்படைகள் எள்ளளவேனும் இரக்கம்காட்டாது அன்னையின் அகிம்சையினை இழிவு படுத்தினர். அதே அரசிற்கு பெண்களின் மனோ வலிமையை எடுத்தியம்பிய பெருமையை தன்னகத்தே கொண்டு பெரும் இலட்சியத் தீயினை நாட்களாக,வாரங்களாக, ஒரு மாதகாலமாக தொடர்ந்து தன்னுயிரை தாயகத்துக்காய் ஈய்ந்தார்.

இன்று பூபதித் தாய் வளர்த்த தியாக வேள்வி பதினாறு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் தமிழ் மக்களால் போற்றப்பட்டு வருகின்ற மையும் தொடர்ந்து பேணப்பட வேண்டியதும் தமிழர்களின் தலையாய கடமையாகும்.

தேச விடியலுக்காக எமது போராளிகள் ஆயுதம் ஏந்திப் போராடிய வேளைகளில் அவர்களுக்கு உறுதுணையாக நின்றும்

**சு. பாஸ்கரன்**

இராணுவ ஆக்கிரமிப்பு வலைக்குள் வாழ்ந்த மக்கள் தமிழ் உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராட முடியாத நிலையில் பக்கத்துணையாக இருந்து கூடிநின்று எதிரியை அழித்தவர்களும் போராளிகளைக் காப்பாற்ற தம்முயிர்களைத் தியாகம் செய்தவர்களையும் இன்று நாம் போற்ற வேண்டிய நாளாக இந்நாளை நினைவு கூருகின்றோம்.

இன்று தமிழ் தேசியத்திற்காக போராடுகின்ற தேசப்புதல்வர்களையும்,போராடி உயிர்நீத்த வீரமறவர்களையும்,தேசப்பற்றாளர்களையும் கண்டு கொண்ட எமது தேசம் விடிவு பெறுகின்ற விடிவின் வாசலில் நிற்கின்ற வேளையில் விரைவில் எமது நாடு விடிவு பெற வேண்டும் என்பதற்காக உலக நாடுகள் எங்கும் பொங்கு தமிழாகப் பொங்கி எழவைப்பதும், ஏன் சொந்த மண்ணில் எதிரியின் ஆக்கிரமிப்பிற்குள்ளும் பொங்கி எழுந்த பொங்கு தமிழுக்கு வலுச் சேர்த்தவர்களும் சேர்க்கவுள்ளவர்களும் எமது மண்ணின் தேசப்பற்றாளர் என்றே கூறவேண்டும்.

பூபதியின் தியாகத்தின் பின்னாலும் தேசப்பற்றாளர்களின் தியாகத்தின் பின்னும் தமிழ்மக்கள் இன்று அணியணியாக திரண்டு நிற்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது. இவர்களின் தியாகம் தொடர்ந்து போற்றப்பட்டாலும் இவர்கள் என்ன நோக்கத்திற்காக இவ் அளப்பரிய தியாகங்களைச் செய்தார்களோ அதே இலட்சியத்திற்காக நாமும் எமது பங்களிப்பினை மேற்கொண்டு தேச விடுதலையை வென்றெடுக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு வருக்கும் உள்ளமை இன்றைய நாளில் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.

# பதவி ஏற்பதிலேயே இழுபறி பாதிக்கப்படப்போவது மக்களே

சிறிலங்காவின் வரலாற்றில் தேர்தல் ஒன்று நடைபெற்று முடி வுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் அரசாங்கம் ஒன்று பதவியேற்க எடுக்கும் காலம் நீண்டு செல்வது இதுவே முதல் முறையாகும்.இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்கள் இதனை உணர்த்தியுள்ளன. இதற்கு காரணம் சந்திரிகாவின் நிறைவேற்று அதிகார முறையிலான சனாதிபதி பதவியாகும்.

அவர் இந்த சனாதிபதி முறையை பயன் படுத்தி சிறிலங்கா அரசியலில் தற்போது பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளார் 2001ஆம் ஆண்டு பதவிக்கு வந்து 2 ஆண்டுகளே பூர்த்திசெய்த ஐ.தே.முன்னனியரசு மீது பல பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி பொது மக்களின் கவனத்தையும் திசைமாற்றிக்கொண்டு சென்று இறுதியில் பாராளுமன்றத்தையே கலைத்துவிட்டார். இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது அவரது அரசியல் ஓய்வு காலம் அண்மித்தலே. அதாவது இன்னும் இரு வருடங்களின் பின்னர் அவர் சனாதிபதி பதவியிலிருந்து தூக்கியெறியப்படுவார் என்பதும் அடுத்த சனாதிபதித் தேர்தலில் அவர் மீண்டும் வேட்பாளராக வரமுடியாது என்பதுமே காரணம்.

எனவே சந்திரிகா இன்னும் சில காலத்துக்கு அரசியலில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்ற அவாவில் திடீரென மக்களின் போக்கை மாற்றி தேர்தல் ஒன்றை நடத்தி முடித்திருக்கிறார் இதற்கு பெரிதும் உதவியவர்கள் ஜே.வி.பி யினர்.


என்னதான் சந்திரிகா தேர்தல் ஒன்று நடைபெற வேண்டும் என விரும்பியிருப்பினும் தேர்தலில் தமது கட்சி வெற்றிபெற்று மீண்டும் பதவிக்கு வருமா என்பதில் சந்திரிகாவுக்கு நிறையவே சந்தேகம் இருந்து வந்தது. அதனாலேயே அவர் ஜே.வி.பி அமைப்புடன் கூட்டு சேர்ந்து தேர்தலில் இறங்கினார். காரணம் அவரது சுமார் 7 ஆண்டுகால ஆட்சியில் தமிழ் மக்கள் மட்டுமின்றி அனைத்து சமூகங்களும் அச்சத்துடன் வாழும் நிலையில் யுத்தத்தை சாட்டாக வைத்து நாட்டில் அங்குலத்துக்கொரு சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தினார். அவரது காலத்திலேயே தலைநகரில் பல வளங்கள் குண்டு வெடிப்புக்களால் சேதமாகின. பல உயிர்கள் பலியாகின இதனை மக்கள் மறந்து, தமக்கு தேர்தலில் ஆதரவாக வாக்களிப்பார்கள் என்ற துணிவு அவருக்கு இருந்திருக்க முடியாது.

அது மெய்ப்படுத்தப்பட்டது போலவே அவரது சிறி.சு.கட்சிக்கு எதிர்பார்த்த ஆதரவு கிட்டவில்லை.அது தற்போதும் ஆட்சியமைக்க தடுமாறும் நிலையிலேயே காணப்படுகிறது. பேரினவாத ஜே.வி.பியின் கூட்டு இல்லையெனில் சந்திரிகா ஆட்சியமைப்பதுபற்றி சிந்திக்கவும் முடியாது

எப்படியாவது ஐ.தே.முன்னணி ஆட்சியை கவிழ்த்து சந்திரிகாவுடன் என்ன வகையிலேயேனும் கூட்டு சேர்ந்து பதவியை கைப்பற்றி விட வேண்டும் என்று எண்ணிய ஜே.வி .பி.க்கே இத்தேர்தல் ஓரளவு வெற் றியைத் தந்துள்ளது.

நடந்து முடிந்துள்ள தேர்தலில் இருபிரதான கட்சிகளும் அறுதிப்பெரும்பான்மை வாக்குகளைப் பெறாத நிலையில் அவற்றுக்கு ஒரு பெரும் சவாலாக ஜே.வி.பி விளங்குகிறது. இதன் உள்நோக்கத்தை ஓரளவேனும் சந்திரிகா அன்று புரிந்தே வைத்திருந்தார் இதனாலேயே ஐ.ம.சு.முன்னணி என்ற கூட்டு ஒப்பந்தமும் பல காலமாக இழுபறிப்பட்டது. அது உறுதிப் படுத்தப்படுவது போன்று தற்போது பாராளு மன்றம் அமைப்பதிலும் சந்திரிகா பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றார். உண்மையில் ஜே.வி.பியின் நோக்கமானது நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து ஆட்சிக்கு வந்த இரு பிரதான கட்சிகளையும் ஓரம் கட்டி விட்டு தமது அமைப்பு நாட்டை ஒருதடவை ஆட்சி செய்து தமது துணிச்சலை வெளிப்படுத்த வேண்டும் என்ற அவாவை பூர்த்தி செய்வதாகும். அதுமட்டுமன்றி கூட்டணி சேர்வதற்கு பெரும் குத்துக்கரணம் இட்ட ஜேவிபி தற்போது நாட்டின் ஆட்சிப் பொறுப்புக்கே உலை வைக்கும் நிலைக்கு முன்னேறியுள்ளது

இந்த மாற்றத்தை சந்திரிகா எதிர்பார்த்தாரோ இல்லையோ தற்போது அவருக்கு ஜே.வி.பியினரால் பெரும் தலையிடி தோன்றிவிட்டது. அது எவ்வாறெனில் கிணறு வெட்ட பூதம் கிளம்பியகதை போலாகும் இதனைச் சமாளிக்க முடியாத சந்திரிகா தற்போது ரணிலிடம் தேசிய அரசு அமைப்பது தொடர்பாக சைகை காட்டியிருக்கிறார் போல் தெரிகிறது. ரணிலைப் பொறுத்தவரை இது சாத்தியமாகாது இந்த நிலையில் ஆட்சிபீடத்தில் குழப்பமும் ஸ்திரமற்ற தன்மையும் நிலைக்குமாயின் உண்மையில் பாதிக்கப்படுவோர் ஆட்சியாளர்கள் அன்றி ஆளப்படுபவரே.






நடந்து முடிந்த தேர்தலை நோக்குவோமாயின் மக்கள் எதிர்பார்த்தது நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் அதனால் தமது வாழ்க்கைச் செலவு குறையும் என்பதையுமே. இது மக்களின் முதலாவதும் முக்கியமானதுமான எதிர்பார்ப்பாகும். இராமன் அண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என்பதுபோல் நிறைவேற்று அதிகார முறை மாற்றம் தொடர்பாகவோ விகிதாசாரத் தேர்தல் முறை நீக்குவது பற்றியோ சிந்தித்து வாக்களித்திருக்க முடியாது. இவை தேவைப்படுவது ஆட்சியாளருக்கே, குறிப்பாக சந்திரிகாவுக்கே இந்த மாற்றங்கள் அவசியமாயின. காரணம் அவரது அரசியல் வாழ்க்கை. இதற்க சந்திரிகா தமக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்து விடும் என நம்பியிருந்தார். ஆயினும் கூட்டுக் கட்சியில் தமது சிறி.சு.கட்சி உறுப்பினர் களுக்கு போதுமான வாக்குகள் கிடைக்க வில்லை என்பது ஒரு புறமும் ஜே.வி.பி சிறி.சு.க. உறுப்பினர்களின் இழுபறி ஒருபுறமுமாக கூட்டணிக்குள்ளேயே பிரச்சினைகள் ஆரம்பித்துள்ளன. இதனையும் சந்திரிகா பாராளுமன்றைக் கலைக்கும் வேளை எதிர்பார்த்திருக்க முடியாது.

உண்மையில் சனநாயக நாடு ஒன்றில் ஆட்சி பீடத்தில் நடவடிக்கைகள் யாவும் பொது மக்களின் எதிர்பார்ப்புகளின் பிரதிபலிப்புகளேயாகும். ஏனெனில் ஒருபொதுத்தேர்தலில் எதனை நிறைவேற்றுமாறு மக்கள் ஆட்சியாளரைக் கோருகிறார்களோ அதுநிறை வேற்றப்படவேண்டும் ஆயினும் சிறிலங்காவையும் சந்திரிகாவையும் பொறுத்தளவில் இதுமுற்றிலும் எதிர்மாறானதாக அமைகிறது.

இதன்காரணமாகவும், தற்போது ஆட்சிப்பீடத்தில் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பு காரணமாகவும், வரும் 22ஆம் திகதிக்குப்பிறகு நிலைமை ரணில்விக்கிரமசிங்காவின் ஐ.தே. முன்னணிக்கு சாதகமாயும் அமைய வாய்ப்பாகலாம்.ஒன்று நாடாளுமன்றத்தில் ஐ.ம.சு முன்னணி தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டியது; மற்றது ஜே.வி.பி.யினருக்கு உறுதியளிக்கப்பட்ட அமைச்சுப்பதவிகளை வழங்குதல். இந்த இரு முடிச்சுக்களையும் சந்திரிகா அவிழ்த்து விட்டாலும் மேலும் ஒருசிக்கல் சந்திரிகாவுக்கு ஏற்படும். அதாவது 'நிறைவேற்றதிகார மாற்றம்'. இதனை அவர் மாற்றாது விட்டால் அவரின் அரசியல் ஆயுட்காலம் முடிவுக்கு வரும்

**வீ.வடிவேல்**

அத்துடன்சந்திரிகாவின் கனவுகளும், கற்பனைகளும் தவிடு பொடியாகிவிடும் ஸ்திரமற்ற மீண்டும் ஒரு தத்தளிக்கும் அரசு அமைவதால் பொதுமக்களும்இதனால் பாதிப்புக்குள்ளாகுவது நிச்சயம்.

அத்துடன் தமது கட்சி ஆட்சிப்பீடம் ஏறக்காரணமாக இருக்கும் ஜே.வி.பி யினருக்கே அமைச்சுப்பதவிகளை வழங்க மறுக்கும் சிறில.சு.க.வினர் விடுதலைப்புலிகள் கோரும் இடைக்கால சபையை அங்கீரிப்பார்கள் என்பது சந்தேகம்.

ஆகவே தமிழ்மக்கள் தற்போதுதேர்தல் மூலம் வெளிப்படுத்தியுள்ள கோரிக்கைகள் மறுக்கப்படும் நிலை தோன்றுமிடத்து நாட்டில் மீண்டும் விபரீதங்கள் ஏற்படவாய்ப்பு ஏற்படலாம் இதுவும் சந்திரிகாவையே பொறுப்பாளியாக்கி விடும். அவர் அரசியலில் இருந்து ஓய்வு பெறும்போது கறைபடிந்த முகத்துடனேயே செல்லநேரிடும். இதற்கெல்லாம் காரணம் சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டி போல சந்திரிகா முதலில் 3அமைச்சுக்களைப்பறித்து பின்னர் திடீர்த் தேர்தலையும் நடத்தியமையாகும்.இதனால் எதிர்வரும் காலங்களில் ஏற்படும் நன்மை தீமைகளை பொறுப்பேற்கும் நிலையில் உள்ளார் என்பதே உண்மை. -



## வன்னேரிக்குளம் மத்தியமருந்தக கட்டடம் திறந்து வைப்பு

(அலுவலகச் செய்தியாளர்)

யுனிசெப் நிறுவனத் திட்ட உதவியுடன் புதிதாக நிர்மானிக் கப்பட்ட வன்னேரிக்குளம் மத்திய மருந்தகக் கட்டடம் அண்மையில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.டாக்டர் ச. முருகானந்தன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி திறப்புவிழா நிகழ்வில் மங்கள விளக்கினை வைத்திய கலாநிதி தர்மேந்திரா,டாக்டர் சிவபாதசுந்தரம்,பொறியிலாளர் தயாபரசிவம் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் முடியரசன் ஏற்றிவைத்தார்.

மத்திய மருந்தக பெயர்ப்பலகையினை கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி திரைநீக்கம் செய்துவைக்க மத்திய மருந்தக கட்டடத்தினை யுனிசெப் நிறுவன வன்னிமாவட்ட பிரதிநிதி பெனிபுரூன் நாடாவினை வெட்டி திறந்து வைத்தார். வைத்திய அறையினை கிளி/கரைச்சி பிரதேசசெயலர் பொன்.நித்தியானந்தன் நாடாவினை வெட்டி திறந்துவைத்தார்

அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும், பெருமளவிலான மக்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கரைதுரைப்பற்று உ.அ.பிரிவில் இளந்தென்றல் முதலிடம்

கரைதுரைப்பற்று பிரதேச உதவி அரச அதிபர் பிரிவின் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி கடந்த 16,17 ஆகிய திகதிகளில் முல்லைத்தீவு பொது மைதானத்தில் உதவி அரச அதிபர். காசிப்பிள்ளை தலை மையில் இடம்பெற்றது.

தமிழீழத் தேசியக்கொடியினை முல்லைப் பிரதேச கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற மெய்வல்லுனர்ப் போட்டியில் முதலாம் இடத்தை அளம்பில் இளந்தென்றல் வி.க.உம், இரண்டாம் இடத்தை முள்ளியவளை வளர்மதி வி.க. உம், மூன்றாம் இடத்தை முல்லைத்தீவு நெய்தல் வி.க.உம் பெற்றுக்கொண்டன.

சுமார் பன்னிரெண்டு கழகங்கள் இவ்விளையாட்டுப்போட்டியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# அரசியலமைப்பை மாற்ற முயன்றால் நாடு பிளவடையும் அபாயம்

## புதிய இடதுசாரி முன்னணித் தலைவர்

**அரசியலமைப்புச்சட்டத்திற்கு முரணான வகையில் அரசியல் யாப்பை மாற்றியமைக்க முயற்சிக்கும் சனாதிபதியின் நடவடிக் கையால் நாடு இரண்டாகப்பிரிந்து போகும் அபாயம் உள்ளது என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன கூறியுள்ளார்.**

சனாதிபதி தனது அரசியல் எதிர் காலத்தைத் தனக்கு ஏற்றவிதத்தில் அமைத்துக்கொள்ள முயற்சிக் கின்றார்.

அரசியலமைப்பு மாற்ற நடவ டிக்கை அபாயகரமானது. இதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. மூன்றில் இரண்டு பெரும் பான்மையை விடுத்து அறுதிப் பெரும்பான்மைகூட சனாதிபதியின் கூட்டமைப்பிடம் இல்லை.

அரசியலமைப்பு நிர்ணய சபை மூலம் அரசியலமைப்பு மாற்றப்பட்ட தால் நாடு இரண்டாகப் பிரியும் அபா யம் ஏற்படும்

கடந்த 7வருடங்களில் இல்லாத அக்கறை அரசியலமைப்பு மாற்றத் தில் சனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. ஏன் என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும். எதிர்கால அரசியல் நிலைமைகளைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்காக பலாத்காரமாக அசியலமைப்பை மாற்ற முயற்சிக்கின்றார். என்றும் அவர் கூறியுள்ளார்.

# யாழ். இல் குடும்பநல உத்தியோகத்தர்

## பற்றாக்குறையால் சிரமம்

யாழ். மாவட்டத்தில் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு பெரும் பற் றாக்குறை நிலவிவருவதால் குடும்பப் பெண்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொள்கின்றனர்.

நீண்டகாலமாக நிலவிவரும் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரியவர்கள் துரித நடவடிக்கை களை மேற்கொள்ளாததனால் இப் பற்றாக்குறை தொடர்கிறது.

இதனால் யாழ். மாவட்டத்திலுள்ள கர்ப்பிணித்தாய்மார்களும் சிறுகுழந்தை களும் உரிய மருத்துவ ஆலோசனை களை பெறமுடியாது நோய்த் தாக்கங் களுக்கு இலக்காகும் நிலை காணப் படுவதாகவும் இது கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட் டுப்பின்தங்கியுள்ள கிராம மக்களி டையே பெருந்தாக்கத்தை உருவாக் கிவருவதாகவும் கவலை தெரிவிக்கப் படுகிறது. (33)

## நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதி ஒருவர் தப்பி ஓட்டம்

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த மொன ராகலைக்கு கூட்டிச் செல்லப்பட்ட கைதி ஒருவர் தனமன்விலை எனு மிடத்தில் தப்பியோடிவிட்டார்.

இந்தக் கைதி இரு காவலர்களால் தங்காலை சிறைச்சாலையிலிருந்து தனியார் பஸ்சொன்றில் கொண்டு வரப்பட்டார் பிரயாணிகள் தேநீர் அருந்துவதற்காக தனமன்விலையில் பஸ் நிறுத்தப்பட்டது. அப்போது கைதி தப்பியோடி விட்டார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்துள்ளது.

-க.பொ.த உயர்தரம்-2004-

# விஞ்ஞான பாடங்களுக்கான துரிதமீட்டல் செயலமர்வு

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேர வையின் உதவியுடன் தமிழீழக் கல்விக்கழகம் மாணவர் அமைப்பு என்பன இணைத்து நடாத்தும் க.பொ.த. உயர்தரத்தேர்வு 2004 ஆம் ஆண்டு விஞ்ஞானப்பாடங்களுக்கான துரித மீட்டல் செயலமர்வு கிளி நொச்சி மாகவித்தியாலையத்தில் 20.,21,22 ஆம் திகதிகளில் நடை பெறவிருக்கின்றது.

நாளை காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை பௌத கவியல் பாடத்தை ஆசிரியர்களான எஸ்.கணேசன் மற்றும் எஸ்.சி. குணசீலன் ஆகியோரும் நாளை மறுதினம் காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 வரை இரசாயனவியல் பாடத்தை ஆசிரியர்களான ரி.தில்லைநாதன் மற்றும் வி.இராஜதேவா ஆகியோரும் வரும் வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை உயிரியல் பாடத்தை ஆசிரியர்களான வி.குகாதரன் மற்றும் ஆர்.ஈஸ்வரராசன் ஆகியோரும்இ இணைந்த கணித த்தை அசிரியர் ஏ.குணசிங்கம் நடத்தவுள்ளார்.

## நிதிஉதவி

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தால் "ஒக்ஸ்பாம்" நிறுவனத்தின் உதவியுடன் 20 கிராமங்களில் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்காக 5000 ரூபாவும் சட்ட ஆலோசனை நிதிக்காகவும் 3000 ரூபாவும் வழங்கிவருகின்றது.

நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி மண்டபத்தில் வைத்து 20ற்கு மேற்பட்ட பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (மி)

## மாட்டுவண்டி சவாரிச் சங்கம்

கிளிநொச்சி மாவட்டத்தில் மாட்டு வண்டிச் சவாரிச்சங்கம் அமைப்பதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் எதிர்வரும் ...ஆம் திகதியன்று காலை இது ...பம்சம்பந்தமான கூட்டம் 10.00 மணிக்கு கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவன மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மாட்டுவண்டிசவாரியில் ஈடுபடும் மாட்டுவண்டி உரிமையாளர்கள், மற்றும் சவாரிப்பிரியர்கள் அனைவரை யும் மேற்படி கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும் வண்ணம் தமிழீழ விளையாட்டுத்துறை இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினர் வேண்டி யுள்ளனர். (சோ)

## துரித செயலமர்வு வகுப்புக்கள்

புதுக்குடியிருப்பு மகாவித்தியா லயத்தில் லண்டனில் இருந்து வருகை தந்த அறிஞர்களினால் மே மாதத்தில் பரீட்சை எழுதவுள்ள உயர்தர மாணவர்களுக்கான கணித விஞ்ஞான பிரிவினருக்கு செயலமர்வு நடத்தப்படவுள்ளது. முல்லை மாவட்டத்திலுள்ள சகல மாணவர் களும் இதில் கலந்து கொள்ளலாம். இச் செயலமர்வுதொடர்ச்சியாக ஒரு கிழமை நடைபெறும் எனவும் ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள்ளனர். (20)

## குடிநீர் தட்டுப்பாடு

முல்லைத்தீவு நாயாற்று பகுதி மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. கிணறுகள் இருந்த போதும் நீர், உப்பு நீராககாணப் படுவதால் செம்மலையிலிருந்தே குடிநீர் எடுத்து வந்து பாவிக்கின்றனர். இவ்விடயம் ச பையுடன் தொடர்பு கொண்டும் இதுவரை எந்த ஆக்க பூர்வமான செயல்பாடுகளும் நடை பெறாததினால் குடிநீருக்கு பெரும் சிரமப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (20)

## இல.மெய்வல்லுனர் சங்கத்தில் பதிவு

முல்லை. மாவட்டமெய்வல்லுனர் சங்கம் இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தில் 2004ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. 2002ஆண்டு தொடக் கம் பதிவு செய்வதற்காக எடுத்த முயற்சி இவ்வாண்டிலேயே பூர்த்தி யானது தலைவராக சு. இராசையா, செயலாளராகந.முகுந்தன் ஆகியோரே தாய்ச்சங்கமான இச்சங்கத்தில் பதிவு செய்வதற்கு செயல்பட்டமை குறிப் பிடத்தக்கது. இனிதொடர்ந்து சகல விளையாட்டுக்கான உதவிகளும் முல்லை மாவட்டத்திற்கு கிடைக்கு மெனவும் தலைவர் தெரிவித்தார் (20)

# நீங்கா நினைவில் நான்கு ஆண்டுகள்

மகிழ்வில் 23 - 05 - 1976



துயரில் 19 - 04 - 2000

## வீரவேங்கை அருள்நிலா

[செல்வி சேகராசா கஜலட்சுமி (கஜா)]

எங்கள் அன்புச் செல்வம் கஜாவே
எம்தேச விடுதலைக்காய்
தன்னுயிர் ஈந்த அன்புச் சகோதரியே
எங்களை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் ஆனதுவே
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எங்கள் துயரம் மாறாது.

உமது பிரிவால் வருந்தும் குடும்பத்தினர்.

வைத்திராயனிவட்டு, தூனையமுடு (4448)

# சிறுவர் உரிமைகள் பற்றி யாழ். இல் கருத்தரங்குகள்

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயமும் ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து யாழ். குடாநாட்டில் சிறுவர் உரிமைகள் பற்றிய கருத்தரங்குகளை நடத்திவருகின்றனர்.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் சிறுவர் உரிமைமீறல்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களைத் தொடர்ந்து மேற்படி இரு தொண்டர்நிறுவனங்களும் இணைந்து இச் செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்திவருகின்றனர்.இதன்போது பொலிசார் சிறுவர்பாதுகாப்பு இல்லங்களின் நிர்வாகிகள் ஆகியோர் உட்பட குடாநாட்டில் உள்ள பின்தங்கிய கிராம மட்டங்களில் உள்ள மக்கள் மத்தியிலும் இக் கருத்த ரங்குகளை நடத்தி வருகின்றனர். (33)

# கணினிப் பயிற்சி நெறிக்கான பயிற்சியாளர் தேர்வு

(அலுவலகச் செய்தியாளர்)

"யுனிசெப்" நிறுவனத்தின் அனு சரணையுடன். கிளி /வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவால் க.பொ.த (சா.த) பரீட்சையில் தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்க ளில் சித்தியெய்தியவர்களுக்கு நடாத்தப் படவுள்ள இலசவ கணினிப் பயிற்சி நெறிக்கான பயிற்சியாளர்கள் தேர்வு நடைபெறவுள்ளது.

கிளி. வலயக் கல்விப்பணிமனை யில் எதிர்வரும் 21ஆம் திகதி 9.00 மணிக்கு மேற்படி பயிற்சியாளர் களுக்கான தேர்வு இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் பயிற்சியாளர் தேர்வுக்கு சமுகமளிப்பவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பப் படிவம்,கல்வித் தகைமைச் சான்றிதழ் கள், தொழிற்தகைமைச் சான்றிதழ் கள், பிறப்புச் சான்றிதழ்,தேசிய அடையாள அட்டை மற்றும் ஏனைய பொருத்தமான ஆவணங்களின் மூலப் பிரதிகளுடன் சமுகமளிக்கும் வண் ணம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கி.சின்னராசா வேண்டியுள்ளார். (சோ)


# முக்கிய அறிவித்தல்

ஓயாதயோகம் சுரண்டல் அதிஸ்டலாபச் சீட்டு மூலம் இது வரை பரிசுகளை பெற்றுக்கொள்ளாத இலக்கங்களுக்கான மீண்டும் குலுக்கல் மூலமான அதிஸ்டம் பார்க்கும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் நடாத்தமுடியாமல் போயுள்ளது என்பதனை மிகவும் மனவருத்தத்துடன் எமது ஆதரவாளர்களுக்கு தெரியப்படுத்துகிறோம். இந் நிகழ்வுக்கான திகதி பின்னர் தெரியப்படுத்தப்படும்.

ஓயாதயோக சுரண்டல்
அதிஸ்டப்பணிமனை
நடுவப்பணியகம்
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(சி-9451)

மரு.ப.நோ.கூட்டுறவுச்சங்கம்,
பெரியபண்டிவிரிச்சான்,- மன்னார். மாவட்டம்

# பணிநிலை வேண்டுகை

மேற்படி பணிநிலை வேண்டுகைக்கான விண்ணப்பங்கள் இலங்கை பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

பதவி:- பொதுமுகாமையாளர் (குறைநிலை)
குறியீட்டு இல:- 101/8
சம்பள அளவுத்திட்டம்:- 5250/= - 7750/=
120X10 - 130X10
அத்துடன் கூ.ச.ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் 58/2003க்கு அமைவாக ரூபா .1250 வழங்கப்படும்.
அகவை:- 25 தொடக்கம் 45 வருடங்களுக்கு மேற்படலாகாது.
தகைமை:-

அ கூட்டுறவு பணியாளர்களின் 09 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமைமேற்பார்வை மட்டத்திலான பதவிகள் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர்களின் 10ஆவது சம்பளத்திட்டத்திலான மேற்குறித்த பதவியில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழக ம் ஒன்றில் பட்டத்துடன் (அல்லது-அதற்கு இணையான பட்டத்துடன்) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவிகள் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

இ கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திர (உயர்தர)க.பொ.த.உ/தரம் இவற்றில் ஒன்றில் மூன்று பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைமட்ட தரத்திலான பதவிகள் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

குறிப்பு:-

* கூட்டுறவுச்சேவையில் உள்ளவர்களுக்கு உச்சவயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.
* கூட்டுறவுச்சங்கங்களில் அல்லது வேறு நிறுவனங்களில் கடமையாற்றிக்கொண்டிருப்பவர்கள் சங்கங்கள், நிறுவனங்களின் ஒப்புதலுடன் விண்ணப்பங்களை அனுப்புதல்வேண்டும்.
* கேட்கப்படும் தகமையின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
* சுயமாக தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் தெளிவாகவும், விபரமாகவும் எழுதப்படுதல்வேண்டும்.
* விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டிய சான்றிதழ்களின் பிரதிகள்
  1. கல்வித்தகைமை சான்றிதழ்
  2. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்.
  3. வேறு தகமைச் சான்றுகள்.

விண்ணப்ப முடிவுத்திகதி :- 15.05.2004
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி :- தலைவர்
மரு.ப.நோ.கூ.சங்கம்,
பெரியபண்டிவிரிச்சான்,
மரு.

வ.சதாசிவம்
மரு.ப.நோ.கூ.சங்கம்
(4442)



## சிந்தனைக்கு

இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 19 -04-2004

## தனிமனிதன்!

"கருணாவின் பிரச்சினை ஒரு தனிமனிதப் பிரச்சினை. தன் மீதானகுற்றச்சாட்டுக்களில் இருந்து கவனத்தைத்திசை திருப்புவதற்காகவே கருணா பிரதேசவாதத்தைக் கிளப்பியுள்ளார் என விடுதலைப் புலிகள் தெரிவித்த போது சிலர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்பட்ட பாரிய பிளவு என்றே சித்திரிக்க முனைந்தனர்.

ஆனால், தற்பொழுது விடுதலைப் புலிகளின் அறிவிப்பானது 'முற்றிலும் சரியானது என்பது தெளிவாகவே வெளிப்படுத்தப்பட்டதொன்றாகிவிட்டது. அதாவது கருணா என்பவர் தனிமனிதனே என்றும் அவரின் பின்னால் எவரும் இல்லை என்பதும் உணரப்பட்ட தொன்றாகிவிட்டது.

கருணா தனியாகச் செயற்படப்போவதாக அறிவிப்புச் செய்த போது, கருணாவின் பின்னால் மட்டு-அம்பாறைப் பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் படையணிகள் மற்றும் மட்டு- அம்பாறைத் தமிழ் மக்கள் அனைவரும் நிற்பதாகவே சிலர் சித்திரிக்க முனைந்தனர். அதாவது கருணா ஒரு தனிமனிதன் அல்ல, மட்டு- அம்பாறை மக்களின் பிரதிநிதி என்றே காட்டிக்கொள்ள விளைந்தனர்.

இதேவேளை கருணாவும் 'தனக்குப் பின்னால் மட்டு-அம்பாறைப் போராளிகளும், மக்களும் அணிதிரண்டு நிற்கின்றனர்' என்றே காட்டிக்கொள்ள முனைந்தார். அத்தோடு தான் இல்லாதுவிடில் விடுதலைப் புலிகள் இயக்கமே வலுவிழந்துபோய்விடும். அதன் செயற்பாடுகள் முடங்கிப் போய்விடும் எனவும் கருணா காட்டிக்கொள்ள முனைந்தார்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் கருணா மீது இராணுவ ரீதியில் நடவடிக்கை எடுத்தால், பெருமளவு இரத்தம் சிந்தப்பட வேண்டியிருக்கும்; அதுமட்டுமல்ல புலிகள் கருணா மீது இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டால், சில வேளை அதுவே யுத்தநிறுத்த உடன்பாட்டை முடிவிற்குக் கொண்டு வருவதாகிவிடும்; எனவும் பல ஆய்வாளர்கள் எதிர்வு கூறியிருந்தனர்.

இத்தகையதொரு கருத்துருவாக்கம் ஏற்பட்டிருக்கையில் விடுதலைப் புலிகள் வாகரைப் பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்ட முறையானது பலருக்கு அதிர்ச்சியைக் கொடுப்பதாக இருந்தது எதிர்பார்ப்பினையும் விட மட்டுப் படுத்தப்பட்ட சிறிய நடவடிக்கை மூலம் மிகக் குறைந்தளவு இரத்தம் சிந்தலுடன் வெருகல் பிரதேசம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தமையானது கருணா குறித்த பலரது மதிப்பீட்டிற்கு பலத்த அடியாக இருந்தது.

ஆயினும் படுவான்கரைப் பிரதேசத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றுவது அவ்வாறான சுலபமாக இருக்காது என்பதே பலரது மதிப்பீடாக இருந்தது. ஆயினும் யாரும் எதிர்பாராத வகையில்,கருணா இவ்வளவு விரைவில் தப்பியோடுவார் என எவருமே எதிர் பார்த்திருக்கவில்லை.

இந்தவகையில் கருணா தப்பியோடியமையே கருணா தனிப்பட்ட நபர் என்பதும், அவருக்குப் பின்னால் போராளிகளோ, மக்களோ இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டதாகியது. அவ்வாறு இருந்திருப்பின் கருணா ஒருசிலருடன் தப்பியோடியிருக்க வேண்டிய தேவை இருந்திருக்க மாட்டாது.

கருணா மட்டு-அம்பாறை மக்களைத்தன்பக்கம் ஈர்ப்பதற்காக பிரதேச வாதத்திற்கு புத்துயிர்கொடுக்க முற்பட்டது என்பது உண்மையே. இதற்காக தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதும் உண்டு. ஆயினும் கருணாவினால் இதில்வெற்றிபெற முடியவில்லை. இதற்கு மக்கள் தமிழ் தேசியம் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தமையே காரணமாகும். மாறாக அவர் வெற்றி பெற்றிருந்தால் கருணாவிற்கு நெருக்கடி ஏற்பட்டபோது மக்கள் அவருக்குப் பாதுகாப்பாக இருந்திருப்பர். மட்டு- அம்பாறை மாவட்டங்களில் இருந்து சிங்கள ஆயுதப் படையினரின் உதவியுடன் தப்பியோடியிருக்க வேண்டிய தேவை கருணாவிற்கு ஏற்பட்டிருக்கமாட்டாது.

அடுத்தாக கருணா தமது படையணிகளில் 6000 பேர் இருப்பதாகப் பெருமை பேசிக் கொண்டாலும், விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடங்கியதும் எத்தனைபேர் அவரின் பின்னால் இருந்தார்கள் என்பது கேள்விக்குரியதாகவே இருந்தது. ஏனெனில் புலிகள் நகர்வுகளைத் தொடங்கியது பெரும் எண்ணிக்கையானோர் ஆயுதங்களுடன் புலிகளிடம் வந்துசேரத் தொடங்கியிருந்தனர். அதாவது கருணாவின் கட்டுப்பாட்டிலிருந்த படையணிகள் சிதைவுறத் தொடங்கியிருந்தன.

அதாவது மக்களினாலும், படையணிகளினாலும் கைவிடப்பட்ட, தனித்துவிடப்பட்ட நிலையிலேயே கருணா மட்டக் களப்பைவிட்டுத் தப்பியோடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவ்வேளையில் கருணாவிற்கு கைகொடுத்தவர்கள். தமிழ் மக்கள் அல்ல, சிங்கள இராணுவத்தினரே யாகும்.

இவ்வாறு தமிழ் மக்களினாலும்,போராளிகளினாலும் கைவிடப்பட்ட கருணா கொழும்பிற்குத் தப்பி ஓடியதும், தன்னுடன் கூட்டிச்சென்ற சிலரைக் கருணாவும் கைவிட்டு விட்டார். அதாவது கருணாவும் தான் தனிமனிதன் என்பதை வெளிப்படுத்தியிருந்தார். இந்நிலையில், விடுதலைப் புலிகள் கருணாவைத் தனிநபர் என்றோ கருணாவின் பிரச்சினை தனிமனித பிரச்சினை என்றோ கூறுவது எந்த வகையில் தவறாகும்? கருணாவின் பின்னால் மட்டு. அம்பாறை தமிழ் மக்களும்,போராளிகளும் உள்ளனர், எனக் கூறியவர்கள் இன்றாவது "கருணா தனிமனிதன" என்பதையும்,அதாவது பிரச்சினை தனிமனித பிரச்சினை என்பதையும் ஏற்றுக்கொள்வார்களா? அன்றி, அவர் பின்னால் இனத்துரோகக் கும்பலே உள்ளது எனக் கூறிக்கொள்வார்களா?

# தேர்தல் விஞ்ஞாபனத்தை நிறைவேற்றுவதாயின் துண்டுவிழும் தொகைபெருமளவு அதிகரிக்கும்

## - நிதியமைச்சின் அதிகாரி தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாயின் எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகை மேலும் அதிகரிக்கக் கூடும் என தற்போதைய நிதியமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஏற்கெனவே 2004ம் ஆண்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவு திட்ட யோசனைகளில் பற்றாக்குறை 11ஆயிரம் கோடிரூபாவாகும். இதற்கிடையில் சந்திரிகாவின் அரசு அறிவித்துள்ள 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குதல், சமுர்த்தி உதவி நிறுத்தப்பட்டவர்களுக்கு மீண்டும் வழங்குதல், உரமானியம் அதிகரித்தல் போன்றவற்றை நிறைவேற்றுவதாயின் அரசின் செலவுகள் அதிகரிக்கும் இதனை ஈடுசெய்வதற்காக வெளிநாட்டுக்கடன், வேறு உதவிகள், புதியவரி,புதிதாக நாணயத்தாள் அச்சிடுதல் போன்ற பலவேறு வழிகளில் வருமானத்தை பெறவேண்டும் இதனால் குறுகிய காலத்திலேயே வட்டிவீதத்தை அதிகரிக்க நேரிடும் என அவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

# வடக்கில் உலர் உணவு நிவாரணம் நிறுத்துவதற்கு நடவடிக்கை?

வடக்கில் மாதாந்த உலர்உணவு நிவாரணம் பெற்றுவரும் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் அடுத்துவரும் மாதங்களில் தமது நிவாரணத்தை இழக்க இருக்கின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மாதாந்த உலர்உணவு நிவாரணத்தை கணிசமான அளவு குடும்பங்கள் பெற்றுவருகின்றன.

மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபாவைப் பெற்றவர்களுக்கு அதன் பின்னர் ஒரு வருட காலத்தில் நிவாரணம் நிறுத்தப்படும் என்று முன்னரே அரசுஅறிவித்திருந்தது.

இதன்படி மீள்குடியமர்வுக் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபாவைப் பெற்றவர்களுக்கு நிவாரணம் வழங்கும் காலஎல்லை அடுத்து வரும்மாதங்களில் முடிவடைகின்றது. இதற்கேற்ப நிவாரணத்தை நிறுத்தவசதியாக பட்டியல் மூலமே இம்மாதம் நிவாரணம் வழங்கப்படுகின்றது.

மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்குத் தொடர்ந்தும் நிவாரணம் வழங்கப்படும். அதற்கு வசதியாக அவர்களுக்கு ஆறு மாதகாலத்துக்கான முத்திரைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை தொழில் பாதிப்புப் போன்ற காரணங்களுக்காக நிவாரணம் பெறுபவர்களுக்கும் படிப்படியாக நிவாரணம் நிறுத்தப் படவுள்ளது என்று கூறப்படுகின்றது.

# யதார்த்தத்தை உணர்ந்து செயற்படாவிடின் கட்சிப்பிளவுபடுவது தவிர்க்க முடியாது

## - ஐ.தே.க. தலைவருக்கு மயோன் எச்சரிக்கை

(கொழும்பு)

யதார்த்த நிலையை உணர்ந்து ஐக்கியதேசியக்கட்சித் தலைவர் செயற்படாத பட்சத்தில் கட்சிப்பிளவுபடுவதும் கிழக்கு மாகாண முக்கியஸ்தர்கள் தனிக்கட்சி அமைப்பதும் அடுத்த மூன்றுமாதத்திற்குள் நிகழும் எனவும் இதனைத் தடுக்க முடியாதெனவும் மயோன் முஸ்தபா தெரிவித்துள்ளார். அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச ஐக்கிய தேசியக் கட்சி கொத்தணி அமைப்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் நேற்று முன்தினம் கல்முனை சாகிரா தேசிய பாடசாலையில் நடைபெற்றசமயம் அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு உறுப்பினருமான மயோன் முஸ்தபாமேலும் தெரிவிக்கையில்;

ஐக்கியதேசியக் கட்சிக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் தேர்தல் சம்பந்தமாக செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களின் தனிமனித அடிப்படை உரிமைகள் மீறப்படும் அம்[illegible] இடம்பெற்றிருக்கின்றன. எ[illegible] விசேடமாக கிழக்கு மாகாண வே[illegible] ளர்களுக்கே இந்நிலைமை ஏ[illegible] ருக்கிறது. என்றும் தெரிவித்துள்ளா[illegible].

ஐக்கிய தேசியக்கட்சி இந்த நிலைக்கு மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் எனவும், இது இடம்பெறாத சமயத்தில் கிழக்குமாகாண முக்கியஸ்தர்கள் கட்சியில் இருந்துவிலகி புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கவேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவத்திலிருந்து தப்பி ஓடியோரால் பாதகமான விளைவுகள் ஏற்படும்

## -ஹெலஉறுமயவினரிடம் மு.கா.எச்சரிக்கை

இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றுள்ள 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ளனர். இவர்கள் ஆயுதப்பயிற்சி பெற்றவர்கள் இவர்களைச்சரியான முறையில் நெறிப்படுத்த வேண்டும் இல்லையேல் பாதகமான விளைவுகளை தவிர்க்கமுடியாமல் போய்விடும்.

இவ்வாறு ஹெலஉறுமய கட்சியினரிடம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது.மு.கா.தலைவர் ரவூப்ஹக்கீம், செயலாளர் ஹஸனலி மற்றும் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் இருவர், ஆகியோர் கண்டியில் ஹெலஉறுமய எம்.பி.க்களுடன் பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் நடத்தியுள்ளார்கள்.

தாமும் அடிப்படைவாதத்தையே அனுசரிப்பதாகவும் சிங்கள பௌத்த மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக தாம் அவ்வாறான தீவிரப்போக்கை கடைப்பிடித்தாலும் கூட வன்முறையின் ஊடாக யாரையும் இம்சைக்கு உள்ளாக்கி பயனடையும் எண்ணம் தங்களு[illegible] பது இல்லையென்றும் ஹெலஉறுமயவைச் சேர்ந்த [illegible]ாத்தபிக்கு ஒருவர் கருத்துக் கூறியுள்ளார்.

[illegible]மதேரரின் மறைவையடுத்து சிலபகுதிகளில் நடைபெற்ற கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான தாக்குதல்களை ஜாதிகஹெல உறுமயவைச் சேர்ந்த ஒரு பிக்கு கண்டித்தார்.

அப்போது கருத்துத் தெரிவித்த மு.கா.தலைவர் முஸ்லிம் களோடு தொடர்புபடுத்தி அடிப்படைவாதம் என்பதற்கு தவறான விளக்கங்கள் கொடுக்கப்படுவதாகவும் அவற்றில் உண்மை நிலையென்றும் இஸ்லாத்தின் கொள்கைகளின் அடிப்படையில் சனநாயக ரீதியாக உரிமைகளை பெற்றுக்கொள் வதையே நோக்கமாகக் கொண்டு செயற்படு வதாகவும் அவர் கூறியுள்ளார்.

# பிரைன் லாறா ஒருநாள் போட்டிகளில் இல்லை



இங்கிலாந்து மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் லாறா பங்கு பற்றுவது சந்தேகமாகயுள்ளது. அவரது கைவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக முதலாவது போட்டியில் கலந்து கொள்ள வில்லை என அந்நாட்டு கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது.

எனினும் இவரது காயம் மாறினால் அடுத்த போட்டிகளில் விளையாடுவார். இவர் இங்கிலாந்துக்கெதிரான கடைசிடெஸ்ட்போட்டியில் 400 ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்தது அறிந்ததே.

# லாறாவின் சாதனையை சேவாக் முறியடிப்பார்

## மொகிந்தர் அமர்நாத்

டெஸ்ட் போட்டி ஒன்றில் 450 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்த பிரைன் லாறாவின் சாதனையை இந்திய வீரர் விரேந்தர் சேவாக் முறியடிப்பார் என முன்னாள் கிரிக்கெட் வீரர் மொகிந்தர் அமர்நாத் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

படிப்படியாக முன்னேறும் சேவாக் அண்மையில் 309 ஓட்டங்களைக் குவித்ததை நோக்குமிடத்து இச்சாதனையை நிறைவேற்றக்கூடியவர் சேவாக் என்று கூறியுள்ளார்.



# புலிகளிடம் இருந்த மிகப்பெரிய ராணுவபலமே சனாதிபதியைக் கருணாவிற்கு உதவாது தடுத்தது!

## இராணுவ ஆய்வாளர் தராக்கி

(லண்டன்)

விடுதலைப்புலிகளிடம் மிகப்பாரிய இராணுவபலம் இருக்கின்றது என்பதை சிறிலங்காப்படையினர் மிகவும் தெளிவாக சனாதிபதி சந்திரிகாவிடம் கூறியமையால் தான் அவர் கருணாவை ஆதரிக்கவில்லையென இராணுவத்துறை ஆய்வாளர் சிவராம் பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

கேள்வி: கருணாவுடன் கொழும்புக்குச் சென்ற ஜிம்கெலிதாத்தா, றொபேட் போன்ற முக்கிய தளபதிகள், போராளிகள் மீண்டும் கிழக்கிற்கு வந்து புலிகளுடன் இணைந்திருப்பதற்கு என்ன காரணமாக இருக்கலாம்? எனக் கேட்டபோது.

அவர்கள் சிறிலங்காப்படையினருடன் இணைந்து செயற்படுவதை மற்றவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது அவர்கள் நீண்ட காலமாக விடுதலைப்போராட்டத்தில் இருந்தவர்கள் எனவே அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள். ஆகையால் கருணாவுடனிருந்த ஒரு சிலரைத்தவிர மற்றவர்கள் புலிகளுடன் தொடர்பு கொண்டு அனைவரும் மீண்டும் அவர்களுடன் இணைந்துள்ளனர்.

கேள்வி: கருணா எங்கிருக்கின்றார் என்பது பற்றி பல ஊகங்களும் செய்திகளும் வெளியாகியுள்ளன? அவர் எங்கிருக்கிறார் எனக்கூறப்பட்டதா? எனக்கேட்டதற்கு.

அவர் வெளிநாட்டிற்குச் செல்லவில்லை. கொழும்புக்கு அல்லது கொழும்பை அண்டிய பகுதியில் தான் இருக்கின்றார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புலிகளின் தலைமைத்துவத்துடன் இரகசிய இணக்கம் ஏற்பட்ட பின்னர் தான் கருணா கிழக்கிலிருந்து வெளியேறியதாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகின்றது. இது பற்றி தகவல்கள் உண்டா? எனக் கேட்டதற்கு.

இது திரிவுபடுத்தப்பட்ட ஓர் விடயமாகும். அதாவது புலிகள் இவ் நடவடிக்கையை மிக கவனமாக திட்டமிட்டு பல தளபதிகள் இந்நடவடிக்கையில் இறங்கி செயற்பட்டு ஒரு புதிய முறையில் கருணாவை ஓரங்கட்டிய நடவடிக்கையாகும். அதில் இரகசிய ஒப்பந்தங்கள் எதுவும் இருக்கவில்லை. புலிகள் கருணாவின் செயற்பாட்டினை ஏற்கனவே அறிந்துள்ளனர். ஆனால் போராளிகள் சிறிலங்கா இராணுவத்தின் கைகளுக்குள் சென்று விடக்கூடாதென்ற வகையில் புலிகள் போராளிகளுடன் தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் கருணாவுடன் இரகசிய ஒப்பந்தம் எதனையும் செய்து கொள்ளவில்லை என்றார்.

கேள்வி: கருணாவின் பிளவு புலிகள் அமைப்பின் இராணுவ வளர்ச்சிக்கு ஓர் பாதிப்பை ஏற்படுத்துமா? எனக் கேட்டபோது.

கருணாவின் வெளியேற்றத்தால் இராணுவச்சமநிலை பாதிப்படையாது என்பதால் தான் புலிகள் அமைப்பிலிருந்து முற்றாக நீக்கப்பட்டார். ஆனால் இவரை ஆதரிப்பதற்கு சிறிலங்காப்படையும் சனாதிபதியும் முன்வரவில்லை. காரணம் புலிகளிடம் மிகப்பாரிய இராணுவப் பலம் இருக்கின்றது என்பதை சிறிலங்காப் படையினர் மிகத்தெளிவாக சனாதிபதியிடம் கூறியதால் தான் அவர் கருணாவை ஆதரிப்பதை கைவிட்டாரென மேலும் தெரிவித்தார்.



இஸ்ரேலிய உலங்கு வானூர்தியின் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளான கமாஸ் இயக்கத்தலைவர் பயணித்த கார் இத்தாக்குதலில் கமாஸ் இயக்கத்தலைவர் அப்டல் அசீஸ் றன்ரிசியும் அவரது இரு மெய்க்காப்பாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

# விடுதலைப் புலிகள் ஏடு இன்று வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையின் பங்குனி - சித்திரை மாதத்திற்குரிய 115வது குரல் 'துரோகச் செயற்பாடொன்று தோற்கடிக்கப்பட்டுவிட்டது' என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகிறது.

'தமிழர் ஆணையும் சிங்களவர் ஆசையும்' என சொல்லும் ஆசிரியத் தலையங்கத்துடன் வரும் இவ்வேட்டில், க.வே.பாலகுமாரன் எழுதிய "தாக்குதல் நிலையும் தற்காப்புநிலையும்" என்ற கட்டுரையும், சாரணன் எழுதிய தேர்தல் அரங்கில் சிங்கள மனோபாவம் என்ற கட்டுரையும், 'பிரித்தாளும் தந்திரம் பழைய மொந்தையில் புதிய........' என்ற கட்டுரையும், எல்லாளன் எழுதிய 'தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணை' போன்ற அரசியல் கட்டுரைகளும் கலாநிதி க.சோமஸ்கந்தன் எழுதிய 'களப்படப் பிடிப்பும் படத்துறை வளர்ச்சியும்' என்ற கட்டுரையும் இடம் பெறுகின்றன.

ஹைற்றியின் போராட்ட விபரிப்பான ஹைற்றியின் நேற்றுகளும் இன்றைகளும் என்ற கட்டுரையும் மற்றும் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும், வழமையான அம்சங்களையும் தாங்கி இவ்வேடு வெளிவருகின்றது.

# சபாநாயகருக்கு வணக்கம் செலுத்துவதா இல்லையா சட்டத்தரணிகளுடன் ஆலோசித்து முடிவெடுக்கப்படும்

### – ஜாதிக ஹெல உறுமயவின் அரசியல் உயர்பீட தேரர்

(கொழும்பு)

இம்மாதம் 22ஆம் திகதி பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னதாக பாராளுமன்றத்தில் சபாநாயகருக்கு வணக்கம் செலுத்துவதா, இல்லையா என்பது குறித்து தீர்மானம் எடுக்கப்போவதாக ஜாதிக ஹெல உறுமயாவின் அரசியல் உயர்பீட அமரகீர்த்தி தேரர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பாராளுமன்ற யாப்பு வெஸ்ட் மினிஸ்டர் முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதென்றும், இந்நாட்டின் பௌத்த பிக்குகள் மக்களால் உயர்வாக மதிக்கப்படுவர்கள் என்று அவர் கூறியதுடன், இது சம்பந்தமாக பாராளுமன்ற பிரதம செயலாளர் சிரியானி விஜேசிங்காவிடமும் சட்டத் தரணிகளுடனும் கலந்தாலோசித்த பின்பே தீர்மானம் எடுக்கப்போவதாக அமரகீர்த்தி தேரர் மேலும் கூறியுள்ளார்.

# ஐ.தே.க.அதிகார பீடங்களில் மாற்றம் ரணில் விக்கிரம சிங்க தீர்மானம்

(கொழும்பு)

தேர்தலுக்கு பின்னர் முன்னைய பிரதமர் ரணில் விக்கிரசிங்க பல புதிய மாற்றங்களை ஐக்கிய தேசிய கட்சியில் மேற்கொள்வதற்கு தீர்மானம் எடுத்துள்ளார்.

அதன்படி புதிய செயலாளராக இம்தியாஸ் பாக்கிமாக்கார் நியமனம் பெற உள்ளார் மேலும் ஐக்கிய தேசிய கட்சியின் புதிய அமைப்பாளராக எஸ்.பி. திசாநாயக்காவை நியமிப்பதென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# மகாவலி தனி அமைச்சாக இருப்பதோடு சி.சுதந்திரக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டதாகும்

### –சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உயர் பீடம் தெரிவிப்பு

(கொழும்பு)

மகாவலியைப் பொறுத்தவரையில் கடந்த முப்பது வருடங்களாக இந்தப் பிரிவு ஒருதனி அமைச்சாக இருந்து வந்ததெனவும் இதே நிலைமை தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் எனவும், அத்தோடு அது சி.சு.கட்சிக்கு ஒதுக்கப்பட்டதெனவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உயர்பீடம் தெரிவித்துள்ளது. மகாவலி ஜே.வி.பி.யினருக்கு வழங்கப்பட்டால் - அவர்களுக்கு ஒன்பது அமைச்சுக்கள் வழங்கப்பட்ட தாக இருக்கும்.

மகாவலி அமைச்சு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கென ஒதுக்கப்பட்ட ஒரு அமைச்சு என்பதை சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறிய போதிலும் இந்த அமைச்சு தமக்கு ஒதுக்கப்பட்டதென ஜே.வி.பி.யினர் வாதிட்டு வருகின்றனர் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூறியுள்ளது.

இதேவேளை ஜே.வி.பி.யினர் கோரிவந்த சகல அமைச்சுக்களையும் திணைக்களத்தையும் அவர்களுக்கு வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்தர முன்னணி அரசின் இந்தத், தீர்மானத்தின்படி விவசாய, காணி, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி ஆகிய அமைச்சுக்கள், கடற்றொழில் நீரியல்வள கிராமிய பொருளாதார அபிவிருத்தி கலாச்சார விவகார தேசிய மரபுரிமை அமைச்சுக்கள் ஆகியன உட்பட சில அமைச்சுக்கள் ஜே.வி.பி.யினருக்கு வழங்கப்பட உள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு அறிவித்துள்ளது.

## இனந்தெரியாதோர்...

வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்தவர்களில் இருவர் பிரபல "சுப்பர் மார்க்கெட்" உரிமையாளர்கள் எனத் தெரியவருகிறது.

மேற்படி சம்பவம் நடந்து முடிந்த தேர்தலுக்கு பின்னர் இடம்பெற்ற மிகப்பெரிய சம்பவம் எனப்பொலிசார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (32)

## தமிழர்...

தேசிய எழுச்சிப்பேரவையின் கிளிநொச்சி பிரதேச செயலாளர் வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுச்சுடரினை கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர் சுபேசன்அவர்கள் ஏற்றிவைத்தார் தொடர்ந்து தேசியக் கொடியினை அரசியல்துறையைச் சேர்ந்த அன்புமாறன் அவர்களும் ஈகச்சுடரினை அரசியல்துறையைச் சேர்ந்த புரியன் அவர்களும் ஏற்றிவைத்தனர். திரு உருவப்படத்திற்கான மலர் மாலையை பெண்கள் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த ரூபி அணிவித்தார். தியாகதீபம் அன்னைபூபதியின் 16வருட நினைவு நாளையொட்டி நேற்று விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை மூதூர் கிழக்கு பகுதியில் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே விளையாட்டுப் போட்டிகளை நடாத்தியது. மரதன் ஓட்டப் போட்டியுடன் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின சைக்கிள் ஓட்டப்போட்டி, எல்லே, கயிறுழுத்தல், அஞ்சல் ஓட்டம் முதலிய விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மூதூர்- ஈச்சிலம் பற்று பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் பவானன், விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோர் நிகழ்வுகளில் பங்குபற்றினர்.

**இன்று**

வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் தியாகி அன்னை பூபதியின்16ஆம் ஆண்டு நினைவின் இறுதி நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் இன்று உண்ணாவிரத நிகழ்வுகளும் பொதுக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன.

கோட்டரீதியாக காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை உண்ணாவிரத நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. தொடர்ந்து பொதுக் கூட்டங்களும் நடைபெறவுள்ளது.

வலிகாமம் பகுதிக்கானது சேணல் கிட்டு பூங்காவிலும். வடமராட்சிப் பகுதிக்கானது கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியிலும், தீவகத்தில் ஐயனார் சனசமூக நிலையத்தின் முன்பாகவும் ஊர்காவற்றுறைக்கானது ஊர்காவற்றுறை திறந்த வெளி அரங்கிலும் தென்மராட்சிக்கானது சங்கத்தானை முருகன்கோயிலுக்கு முன்பாகவும் இன்று அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும் பொதுக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன..

மன்னாரில் மாவட்ட நிகழ்வுகள் மன்னார் நகர சபை மண்டபத்திலும் வவுனியாவில் மாவட்ட நிகழ்வுகள் பூந்தோட்டம் சக்தி விளையாட்டு மைதானத்திலும் முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்திலும் கரைதுறைப்பற்று பிரதேச சபை கட்டடத்திலும் இந்நினைவு நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன இந்நிகழ்வுகளில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளும் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

மட்டக்களப்பில் மாமாங்கேஸ்வர ஆலய முன்றலில் மாலை நான்கு மணிக்கு ஆரம்பமாகும் பிரதான நிகழ்வுகள் சிறப்புற நடைபெறவுள்ளது இதனை மட்டு அன்னையர் முன்னணியினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

## த.தே...

தனித்துநின்று போட்டியிட்டு வெற்றிபெற்றதாகவும் தெரிவித்தார்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து நாடாளுமன்றத்தில் செயற்படுவதுதான் அதற்கு உகந்த வழி என தாங்கள் கருதுவதாகவும் எனவே அது தொடர்பில் எதிர்வரும் 20ம் திகதி பேச்சு நடத்தப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு தாங்கள் விரும்பவில்லை எனவும் இரண்டு பிரதான கட்சிகளும் இணையும் என்பது கேள்விக்குறியானதே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் நாடாளுமன்றத்தில் 24 உறுப்பினர்கள் தமிழ்த் தேசியத்துக்காக குரல் கொடுப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## ஜாதிக...

கப்பட்டுள்ள டபிள்யு.என். லொக்கு பண்டார பௌத்த தர்மத்தை காப்பாற்றுவதற்காக எந்தளவு செயற்பட்டார் போன்ற விடயங்களை பௌத்த பிக்குமாருக்கு சுட்டிக்காட்டியுள்ள ஐ.தே. கட்சி அவருக்கு ஆதரவு தருமாறு கோரியுள்ளது. இதேவேளை டியூகுணசேகரா ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரால் சபாநாயகர் தெரிவிற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும் அவருக்கும் பௌத்த மதத்திற்கும் பெருமளவு சம்பந்தம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சனாதிபதியோ பிரதமரோ இன்று ஜாதிகஹெல உறுமயவின் பிக்குமாரை சந்தித்து கலந்துரையாடுவார்கள் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன ஜாதிக ஹெல உறுமயவுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன. (32)

## இ.த...

பேச்சுவார்த்தை என்ற போர்வையில் நிதியை வெளிநாடுகளிலிருந்து பெறுவதும் தெற்கிலே பொருளாதாரத்தை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படமாட்டாதென நீங்கள் நினைக்கிறீர்களா? எனக் கேட்டபோது.

சிறிலங்கா அரசாங்கத்தை பொறுத்தவரையில் தென்பகுதியை வளர்ப்பதற்கும் சர்வதேச உதவியை பெற்றுக்கொள்வதற்குமான ஓர் பேச்சுவார்த்தை இதுதான் அவர்களின் விருப்பமாகயிருக்கும். ஆனால் புலிகளைப்பொறுத்தவரையில் நிச்சயமாக இவ்விடயங்களைப் புரிந்திருப்பார்களென நான் பூரணமாக நம்புகிறேன்

இதேவேளை எனது சொந்தக் கருத்து என்னவெனில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை ஓர் குறிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் அதாவது ஓரிரு மாதங்களிற்குள் பேச்சுவார்த்தை நடாத்தி இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை கொடுப்பதாகயிருந்தால் தான் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும். அப்படி இல்லாமல் பேச்சுவார்த்தை, என்பதை எவ்வித ஆவணங்களும் இல்லாமல் வெறுமனே ஆரம்பிப்பது தென்பகுதியை வளர்ப்பதற்கான சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமே தவிர வேறில்லை. எனவே இன்று புலிகள் சில ஆலோசனைகளை முன்வைத்துள்ளதுடன் சில ஆவணங்களை கையளித்துள்ளனர் எனவே அதற்கமைய பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆரம்பிக்கப்படுகின்ற பேச்சுவார்த்தை, ஒரு குறுகிய காலத்திற்குள் முடிவடைந்து தன்னாட்சி அதிகார சபை உருவாக்கப்படவேண்டும். இவற்றை ஏற்றுக்கொண்டால் தான் பேச்சுவார்த்தையில் அர்த்தமிருக்கும் பேச்சுவார்த்தையில் பிரயோசனம் இருக்கும் என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது